★★
Registered as a Newspaper in Ceylon    விலை சதம் 10

# ஈழநாடு

THE EELA NADU

தேசிய தினசரி    National Tamil Daily

மலர் 8    (10-5-66)    இதழ் 92

பராபவ சித்திரை 27    ஸபர் முஹர்ரம் 18    செவ்வாய்க்கிழமை

## பர்மிய மொழியில் திருக்குறள்

ரங்கூன், மே 9

ரங்கூனில் இன்று நடைபெற்ற விசேஷ வைபவமொன்றில் பர்மிய மொழியில் மொழிபெயர்க்கப்பட்ட திருக்குறள் நூல்கள் வெளியிடப்பட்டது. திருக்குறள் பர்மிய மொழியில் வெளிவருவது இதுவே முதற்தடவை.

பர்மியமொழியில் வெளியான சில திருக்குறள் நூல்கள் ஐக்கிய நாடுகள் பொதுக்காரியதரிசி யுதாண்டுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

ரங்கூனில் இன்றுகாலை இலவசமாக வழங்கப்பட்ட பர்மிய திருக்குறள் நூல்களை ஏராளமானவர்கள் இன்று பெற்றுக்கொண்டனர். (பி டி ஸி)

டில்லியில

# தொண்டமான்-இந்திரா பேச்சு

## தாயகம் திரும்புபவர்களுக்கு 50,000 ஏக்கர் நிலம்

புதுடில்லி, மே 9

இலங்கையிலிருந்து தாயகம் திரும்பவிருக்கும் இந்தியப் பிரஜைகளில் தேர்ச்சிபெற்ற தோட்டத்தொழிலாளர்களுக்கு தமிழ்நாட்டில் அல்லது தமிழ்நாட்டுக்கருகே 50,000 ஏக்கர் நிலம் ஒதுக்கப்படவேண்டுமென்றும் அங்கு மாதிரித் தோட்டமொன்று அமைக்கப்படவேண்டுமென்றும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் திரு. எஸ். தொண்டமான் எம். பி. இந்திய அரசாங்கத்தைக் கோரியுள்ளார்.

புதுடில்லி வந்துள்ள திரு. எஸ். தொண்டமான் வெளிநாட்டு மந்திரி சர்தார் சுவர்ண் சிங்குடனும் தொழில்துறை மந்திரி திரு. ஜகஜீவன்ராமுடனும் பேச்சுவார்த்தைகள் நடத்தினார். இந்தப் பேச்சுக்களின்போது இலங்கையிலிருந்து தாயகம் திரும்பவிருக்கும் இந்தியப் பிரஜைகள் குறித்து ஆலோசிக்கப்பட்டதாகவும் இது சம்பந்தமாக இந்திய அரசாங்கம் மேற்கொண்ட நடவடிக்கைகள் பற்றியும் ஆராயப்பட்டதாகவும் தெரியவருகிறது. திரு. எஸ். தொண்டமான் இன்று இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியைச் சந்தித்து ஆலோசனை நடத்தினார். இப்பேச்சுக்கள் திருப்திகரமாக இருந்ததாகக் கூறப்படுகிறது.

1964ம் ஆண்டு முன்னாள் இலங்கைப் பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயகாவுக்கும் காலம் சென்ற இந்தியப் பிரதமர் திரு லால்பகதூர் சாஸ்திரிக்குமிடையே செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தத்துக்கிணங்க இலங்கையிலுள்ள ஐந்து லட்சம் இந்தியப் பிரஜைகள் சுமார் பதினைந்து வருடகாலத்தில் இந்தியாவுக்குத் திருப்பி அனுப்பிவைக்கப்படுவார்கள்

(8-ம் பக்கம் பார்க்க)

உப தேர்தல்

## தமிழ்காங்கிரஸ்-சுயேச்சை நேரடிப் போட்டி

யாழ்ப்பாணம், செவ்.

யாழ்ப்பாணம் 12-ம் வட்டார உபதேர்தலில் தமிழ்க் காங்கிரஸ் அபேட்சகராக திரு எம் ஏ நூர்முகமதுவும், சுயேட்சை அபேட்சகராக திரு சி எஸ் ஏ காதரும் போட்டியிடுகின்றனர்.

யாழ்ப்பாணம் நகரமண்டப ஆலோசனை அறையில் நேற்றுக் காலை 11 மணிக்குத் தேர்தல் அதிகாரி திரு பி முருகேசு முன்னிலையில் இத்தேர்தலுக்கான நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்யப்பட்டன

திரு நூர்முகமதுவிற்கு அருகில் தமிழ்க்காங்கிரஸ் நிர்வாகக் காரியதரிசி திரு த சங்கரப்பிள்ளையும், திரு காதருக்கருகில் மேயர் திரு அல்பிரட் துரையப்பாவும் அமர்ந்திருந்தனர்

திரு நூர்முகமதுவின் சின்னம் சைக்கில் என்றும், திரு காதரின் சின்னம் குடை என்றும் தேர்தல் அதிகாரி அறிவித்தபின், தேர்தலுக்கான திகதி பின்பு அறிவிக்கப்படுமென்த் தெரிவித்தார்

## என். கியு. டயஸ் மனு: சுப்ரீம்கோட்டில் நிராகரிப்பு

கொழும்பு, திங்கள்

தொலைபேசி ஒற்றுக்கேட்டல் சம்பந்தமாக விசாரணை செய்வதற்காக நியமிக்கப்பட்டிருக்கும் கமிஷனர் திரு. சி. பி. ஜி. அபயவர்த்தனவுக்கு தம்மை அழைத்து விசாரிக்க அதிகாரம் கிடையாதென தீர்ப்பளிக்கும்படி கோரி பாதுகாப்பு அமைச்சின் முன்னைனாள் நிரந்தரக் காரியதரிசி திரு என். கியு. டயஸ் செய்துகொண்ட மனுவை இன்று சுப்ரீம் கோர்ட் நிராகரித்தது.

திரு என். கியு. டயஸின் மனுவை நீதியரசர்கள் எச். என். ஐ. பெர்னாண்டோவும் ஏ டபிள்யு. எச். அபயசுந்தராவும் விசாரணைசெய்தார்கள், மனுதாரின் சார்பில் திரு சி. டி. எஸ். சிரிவர்தன சமர்ப்பித்த தொகுப்புரையைக் கேட்டபின்னர் நீதியரசர்கள் மேற்கண்ட முடிவுக்கு வந்தார்கள்.

முடிக்குரிய வழக்கறிஞர் எச். கே. டி, சில்வா தமது உரையில் இம்மாதிரியான விசாரணைக் கமிஷனுக்கு எதிராக நிராகரிப்பு தீர்ப்பு கோரி மனு தாக்கல் செய்வது செல்லுபடியாகாதென கூறினார்.

ஹோட்டல் கூட்டுத்தாபனம்

## வாக்கெடுப்பு இன்றி மசோதா நிறைவேறியது

கொழும்பு, திங்கள்

இலங்கை ஹோட்டல் கூட்டுத்தாபன அமைப்பு சம்பந்தமான மசோதா இன்று மக்கள் பிரதிநிதிகள் சபையில் வாக்கெடுப்பின்றி நிறைவேறியது.

சபை இன்று காலைகூடிய போது ஹோட்டல் கூட்டுத்தாபன மசோதாபற்றி கமிட்டி நிலையில் தொடர்ந்து பரிசீலனை செய்யப்பட்டது.

எதிர்க்கட்சியினர் சமர்ப்பித்த பல திருத்தங்களை ராஜாங்க மந்திரி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன ஏற்றுக் கொண்டார்.

## வாரமலர்

11-5-66 'ஈழநாடு' வாரமலரில் வழக்கமான கதை கட்டுரை மற்றும் அம்சங்களுடன் சேர் வைத்திலிங்கம் துரைசுவாமியின் நினைவு மலரும் இணைக்கப்பட்டுள்ளது. இம்மலர். பிரதம மந்திரி திரு. டட்லி சேனநாயக்கா, மகாதேசாதிபதி ஆகியோரின் ஆசிச் செய்திகளையும், சிறப்புக் கட்டுரைகளையும் தாங்கி வெளிவரும்.

# பெற்றோருக்கு அபராதம் விதிக்கப்படும்

## பிள்ளைகளை 14 வயது வரை பாடசாலைக்கு அனுப்பவேண்டும்

கொழும்பு, திங்கள்

பிள்ளைகள் கட்டாயம் கல்விகற்க வேண்டிய வயதான 6 வயதிலிருந்து 14 வயதுக்குள் அவர்களைப் பாடசாலைக்கு கல்விகற்க அனுப்பாத பெற்றோர்களுக்கு அபராதம் விதிக்கும் வகையில் புதியதொரு சட்டம் இயற்றப்படவிருக்கிறது.

பொதுக்கல்வி, தொழில்நுட்பக்கல்வி ஆகியவற்றில் கல்விமந்திரியால் கொண்டுவரப்படவிருக்கும் சீர் திருத்த நடவடிக்கைகளுள் இதுவும் ஒன்றாக இருக்கும். கல்வி மந்திரி உத்தேச திட்டத்தின் கீழ் போதனமொழி தாய்மொழியாகவே இருக்கும். ஆனால் பிள்ளைகளுக்கு சிங்களத்தையோ அல்லது தமிழையோ போதிப்பது பற்றி பெற்றோர் தீர்மானிக்கலாம்

ஆங்கில ஆரம்பவகுப்புகளுக்கு மாணவர்கள் அனுமதிக்கப்படுவது அடுத்த கல்வி ஆண்டிலிருந்து நிறுத்தப்படும். ஆனால் ஆங்கிலம் சகல பாடசாலைகளிலும் இரண்டாவது பாடமாக இருக்கும்.

## அங்கீகாரம் இன்றி பாடசாலை நிறுவினால் அபராதம்

கொழும்பு, செவ்

அரசாங்க அங்கீகாரம் இன்றி பள்ளிக்கூடங்களை நிறுவும் தனியார் அல்லது நபர்கள்மீது அபராதம் விதிப்பதற்கு கல்விமந்திரி தயாரித்திருக்கும் புதிய கல்வி மசோதாவில் வகை செய்யப்பட்டுள்ளது. இதன்படி உத்தரவின்றி பாடசாலைகள் நடத்தப்படும் ஒவ்வொரு தினத்துக்கும் நூறு ரூபாய் அபாராதம் விதிக்கப்படும்.

தோட்டப் பாடசாலைகள் மற்றும் தனிப்பட்டவிசேஷ பாடசாலைகள் சம்பந்தமாக கல்விமந்திரி தமது மசோதாவில் தெரிவித்திருக்கும் ஆலோசனைகளின் கீழ் மேற்படி விதிகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

5 வயதுக்கும் 14 வயதுக்கும் உட்பட்ட மாணவர்களுக்கான பாடசாலைகளை நிறுவும் அதிகாரம் பிரதேச கல்வி அதிபர்களுக்கு மட்டுமே உண்டு. அவரைத் தவிர்ந்த எவரும் இப்படியான பாடசாலைகளை அமைக்க முடியாது. இந்த விதிகள் சித்த சுவாதீன மற்ற குழந்தைகள், அங்கவீனர்களான குழந்தைகள் சம்பந்தப்பட்ட பாடசாலைகளைக் கட்டுப்படுத்தா.

## டிராக்டர் சேவைப் பிரிவுகள்

கொழும்பு, திங்கள்

நீர்ப்பாசன இலாகா புதிதாக இரண்டு டிராக்டர் சேவைப் பிரிவுகளை நிறுவுவதற்கு முடிவுசெய்திருக்கின்றது. ஒரு பிரிவு குருநாகலையிலும், இரண்டாவது பிரிவு அநுராதபுரத்திலும் இடம் பெறவேண்டுமென காணி நீர்ப்பாசன மந்திரி திரு. சி. பி. டி. சில்வா விரும்புகின்றார்.

நாட்டின் விவசாயத்துறையில் நீர்ப்பாசன வேலைகள் நல்லமுறையில் நடைபெறுவதற்காகவே இந்த ஏற்பாடுகள் செய்யப்படவிருக்கின்றன.

# சபையில் பரபரப்பு

## உதவி மந்திரி குறுக்கே நடந்தார்!

கொழும்பு, திங்கள்

இன்று ஜனபிரதிநிதிகள் சபையில் திடீரென பரபரப்பான ஒரு நிகழ்ச்சி இடம் பெற்றது. உதவி மந்திரி திரு. அட்டபத்து அரசாங்கக் கட்சியினர் அமர்ந்திருக்கும் பகுதியிலிருந்து சபையின் குறுக்காக நடந்து எதிர்க் கட்சிக்குள் பிரவேசித்த போது சபையில் ஆரவாரமும் சிரிப்பொலியும் எழுந்தது. திரு. அட்டப்பத்து டாக்டர் என். எம். பெரேராவிடம் போய் ஏதோ முக்கிய விஷயமாக சற்று நேரம் அளவளாவி

(8-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளம்பரம்


## யாழ்ப்பாணம் மாநகரசபை
## கேள்வி விளம்பரம்

தண்ணீர்க்குழாய்பொருட்கள் விநியோகம் செய்வதற்கான கேள்விகள் என்னால் 25-5-66 பகல் 12 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விகளுக்கான பத்திரங்கள் என்னிடமிருந்து 24-5-66 ந் திகதி பிற்பகல் 3 மணிவரையும் பெற்றுக்கொள்ளலாம். இப்பத்திரங்கள் பெறுவதற்காக ரூபா 50 மீளப் பெறும. கேள்வி வைப்புப்பணமாகவும் மேலதிகமான ரூபா 5 மாதிரி விண்ணப்பப்படிவத்திற்காகவும் அறவிடப்படும்.

இதுசம்பந்தப்பட்ட விபரங்களை மேற்கொண்டு அறிய விரும்புபவர்கள் என்னிடமிருந்து அறிந்துகொள்ளலாம்.

ஹட்சன் செல்வராசா,
மாநகரசபை கமிஷனர்
மாநகரசபை காரியாலயம்
யாழ்ப்பாணம்.
8-5-66 404


கொழும்பு, திங்கள்
வர்த்தக அமைச்சின்பாராளுமன்ற ஆலோசனைச்சபை, வர்த்தக அமைச்சரைச் சந்தித்து கூட்டுறவு முறைகள் பற்றி ஆராயவதற்கு உடனடியாக ஒரு கமிஷனை நியமிக்கும்படி கோரியுள்ளனர்.

## 'ஆயிரத்தில் ஒருவன்'

வின்ஸர் படமாளிகையில் 11-5-66 புதன்கிழமை பிற்பகல் 2-30 மணிக்கு எம். ஜி. ஆர்.- ஜெயலலிதா நம்பியார் நடித்த 'ஆயிரத்தில் ஒருவன்' படம் அரியாலை ஐக்கியகழக நிதிக்காகக் காண்பிக்கப்படும். டிக்கட் விபரம் ரூபா 5, 3, 2, 1. 199

# சனசமூக நிலையங்கள் நாட்டின் வளர்ச்சிக்கு அவசியம்

நவாலி, திங்கள்
"மக்கள் சக்தியைத் திரட்டி நாட்டின் முன்னேற்றத்திற்கு உழைக்க சனசமூகநிலையங்கள் சிறந்த முறையில் செயலாற்ற முடியும். ஒன்றுபட்ட வாழ்வினுல் கிராமங்களின் நிலை உயரும். கல்விப்பணியும் சமூகப் பணியும் செய்யும் திறன் படைத்த நிலையங்கள் தற்போது இந்த நாட்டுக்கு மிகஅவசியம் தேவை" என்று நவாலி முருகானந்த சனசமூக நிலையத்தின் 15-வது ஆண்டு நிறைவுவிழாவில் பேசும்போது உடுவில் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் திரு. வி. தர்மலிங்கம் குறிப்பிட்டார்.

விழா திரு. வ. சண்முகத்தின் தலைமையில் ஆரம்பமானது. மாணவிகளால் நிலையகீதம் பாடப்பட்டபின்னர் திரு. இ. சிவசம்பு வரவேற்புரை நிகழ்த்தினுர்.

செயலாளர் அ. மகாலிங்கம் தனது அறிக்கையிலே கடந்த 15 வருட காலத்தில் நிலையத்தின் வளர்ச்சி, அதன் சாதனைகள், நிலையத்தின் தேவைகள் ஆகியவற்றைக் குறிப்பிட்டு நிலையம் மேலும் வளர்ச்சியடையப் பொதுமக்களின் ஒத்துழைப்பை வேண்டிக்கொண்டார்.

முதலியார் வை. மகேசன் பேசுகையில், சனசமூக நிலையம் கிராமத்தில ஒற்றுமையையும் சமாதானத்தையும் வளர்க்கக்கூடிய ஒரு அரிய சாதனம் எனக் குறிப்பிட்டு முருகானந்த சனசமூகநிலையம் அத்தகைய மகத்தான பணியைச் செய்து வருவதையிட்டுத் தான் பெருமைப்படுவதாகச் சொன்னுர்.

மனிப்பாய்க்கிராமசபைத் தலைவர் திரு எஸ். மார்க்கண்டு, திருவாளர்கள் த துரைசிங்கம், உ ந தேவகடாட்சம், தி நவரத்தினம், செல்வன் வை கமலநாதன் ஆகியோரும் பேசினர்.


## நியூ காலிங்கன்
(இணுவில்)
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறை தினங்களில் 2-30 மணி
ஆனந்தன் - சந்திரகாந்தா
நடித்த
நானும் மனிதன்தான்

## ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி2-30, 6-30, 9-45க்கு
பி. யு. சின்னப்பா
நடித்த
ஆரியமாலா

## REGAL--JAFFNA
NOW SHOWING!
Sophia Loren - George Peppard
in
Operation Cross Bow
(Panavision-color) (War Film)


## குருபிரம்ம வித்தியார்த்தி சபைக் கூட்டம்

அச்சுவேலி, திங்கள்
ஸ்ரீலங்கா குருபிரம்ம வித்தியார்த்தி சபையின் வருடாந்தப் பொதுக்கூட்டம் நல்லூர் ஹேரம்ப பவனத்தில் நடைபெற்றது. புதுவருட உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: பிரம்மஸ்ரீ பா. அருணுசலசர்மா, உபதலைவர்: பிரமஸ்ரீ ப. பாலசுப்பிரமணியசர்மா, காரிய தரிசி: பிரம்மஸ்ரீ கு. சிதம்பரநாதசர்மா, உபகாரிய தரிசி: பிரமஸ்ரீ ச. பாலகிருஷ்ணசர்மா, தனுதிகாரி: பிரமஸ்ரீ நா ஞானசம்பந்தசர்மா, உபதனுதிகாரி: பிரமஸ்ரீ தி. பாலசுப்பிரமணியசர்மா. போஷகராக பிரமஸ்ரீ கி. த சுப்பிரமணியசர்மா தெரிவு செய்யப்பட்டார்.


வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க



# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

காணி

வவனியா நகரசபை எல்லைக்குள் வேப்பங்குளத்தில் (பிரதான வீதி) 5 ஏக்கர் நிலம் விற்பனைக்குண்டு. 30 அடி அகலமுள்ள கிணறு அடங்கிய இக்காணியில், 75 தென்னை மரங்களும், 30 மா மரங்களும் வேறு பிரயோசனங்களும் உண்டு. வீடு கட்டவும் தோட்டம் செய்யவும் உகந்த இடம். எஸ். சந்திரசேகரம், தபாற் கந்தோர், வவனியா. 291

யாழ்ப்பாண நகரசபை எல்லைக்குள் சிறந்த அயலில் ஏழு பரப்புக் காணி விற்பனைக்கு இருக்கிறது. முழுவதும் முப்பத்தையாயிரம் அரைவாசியும் வாங்கலாம். செல்லத்துரை, 271, நாவலர் வீதி, (ஆனைப்பந்தி) யாழ்ப்பாணம். 307

ஒலிபெருக்கி

இறம்பியன், வாட்டெக்ஸ்சன் ஒலிபெருக்கி செற் விற்பனைக்குண்டு. பவானி சவுண்ட் சேவிஸ், கதிர்காம கோவிலடி, வதிரி, கரவெட்டி. 320

வெண்காயக்கூடுகள்

நல்ல தரமிக்க ஏழுகண் வெண்காயக் கூடுகள் எம்மிடம் உண்டு. தேவைப்படும் ஸ்தாபனங்கள் தொடர்புகொள்ளவும். நெடுந்தீவுப் பொருளாதார 'விநியோகஸ்தர்' நெடுந்தீவு. 311

## வாடகைக்கு

வீடு

சுதுமலையில், மானிப்பாய்-தாவடி வீதியில் "பசுபதாபதி இல்லம்" சகல வசதிகளுடன் கூடிய பெரிய மாடி வீடு நீண்டகால வாடகைக்கு உண்டு. கைத்தறி நெசவு அல்லது 'டியூடரி' (Tutory) போன்ற ஸ்தாபனங்களை நடத்துவதற்கு வசதியானது. இம் மாதம் இருபதாம்திகதிக்குள் நேரில் சந்திக்கவும்- திருமதி ப. பூமணி 321

## தேவை

பொலிஷ் பண்ணுபவர்

தளபாடஸ்தாபனத்திற்கு அனுபவமுள்ள பொலிஷ்மன் (Polsih-men) தேவை. 25 வயதிற்குள் உட்பட்டவராக இருத்தல் வேண்டும். நேரில் வரவும். பாஷன் பேணிஷிங் பலெஸ், 5, 7, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 316

வைத்தியம்

தொய்வு, சுசம் நீரிழிவு, கிரந்தி முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய சுற்றலோக் இனும். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். வைத்தியர் பரிபூரணனந்தர், கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.


## பௌர்ணமி தின விழா

எழுதுமட்டுவாள், திங்கள்
இந்துக்களின் முக்கிய திருநாளாகிய சித்திரா பூரணைத் தினத்தை முன்னிட்டு பெரியகேணிப பிள்ளையார் கோவிலில் விசேஷ அபிஷேக ஆராதனைகளும் அன்னதானமும் நடைபெற்றன.

மாலை நிகழ்ச்சியாக சம்பூரண அரிச்சந்திரா என்னும் சரித்திர நாடகம் மேடையேற்றம் செய்யப்பட்டது.

## புயலுடன் வந்த வள்ளம்

சுழிபுரம், திங்கள்
கல்லுண்டாய் உப்பளத் திற்கருகாமையில் இருக்கும் தண்ணீர் வாய்க்காலுக்கு அண்மையில் வள்ளம் ஒன்று வந்துசேர்ந்துள்ளது. கடந்த சிலதினங்களுக்குமுன் வீசிய புயற்காற்றை அடுத்து இவ் வள்ளம் வேலணைப்பகுதியிலிருந்து வந்திருக்கலாமென நம்பப்படுகிறது இதுவரை எவரும் அவ்வள்ளத்தை எடுத்துச் செல்லவில்லை.


கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-30.
போயா நாட்களில் 4 காட்சிகள்.
விஜயா (மட்டக்களப்பு) ஸ்ரீகிருஷ்ண (திருகோணமலை)



சிவாஜி கணேசன் - சாவித்திரி
(9 மாறுபட்ட வேடங்களில்)
நாகேஷ் —— மனோரமா
மற்றும் பலர் நடித்திருக்கும்
நவராத்திரி

# தரமான மொறட்டுவை வீட்டுத் தளவாடங்கள்

தரமான தளவாடங்களுக்கும், நியாயமான விலைக்கும்
எம். எஸ். பெர்னண்டோ அன் கொம்பனி
பிரசித்திபெற்றது.
இந்தப்பருவத்தில் விற்பனையாகும் பொருட்கள்
ஒன்றுதான் கீழே காட்டப்பட்டுள்ளது.

முதல்தர பர்மா தேக்கினுலான ஸபிரிங் கட்டில் ரூபா 245-00
இரண்டாந்தர பர்மா தேக்கினுலான ஸெட்டின்ஸபிரிங்கட்டில் ரூபா 175-00.
(முதல்தர ஸ்பிரிங் இணைக்கப்பட்டது)




விருந்தை முதல் சமையலறை வரைக்கும் உங்கள் சகல வீட்டுத் தேவைக்குமான தளவாடங்களும் எங்களிடம்உண்டு. தரம், வேலைப்பாடு, விலை ஆகியவற்றில் உத்தரவாதம்.

எம். எஸ். பெர்னண்டோ அன் கம்பெனி
110, காலி வீதி, மொறட்டுவை
கிளைகள்:- இல 4, இன்டிபெத்த, மொறட்டுவை.
இல. 32, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹானேய்நகர் துண்டிக்கப்பட்டுவிட்டது?

## சைகோனில் மீண்டும் நெருக்கடி: பிரதமருக்கு எதிர்ப்பு வலுக்கிறது

### போராட்டக் குழு அமைத்துவிட்டதாக மாணவர்கள் அறிவிப்பு

சைகோன், மே 9

அமெரிக்க விமானங்களின் தீவிரமான குண்டுவீச்சு நடவடிக்கைகளினுல் வடக்கு வியட்நாம் தலைநகர் ஹானேய் இப்பொழுது மற்றையப் பகுதிகளிலிருந்து ஓரளவு துண்டிக்கப்பட்டுவிட்டதென்று இங்குள்ள அமெரிக்க இராணுவ அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

ஹானேய்க்கும் மற்றைய பகுதிக்கும் தொடர்பாக விருந்த வீதிகள் போக்குவரத்துச்சாலைகள் நாசமாக்கப்பட்டுவிட்டன என்றும் இப்பொழுது சில குறுகிய சாலைகள் மட்டுமே உள்ளன என்றும் இவ் அதிகாரிகள் தெரிவித்தனர்.

அமெரிக்க விமானங்களின் குண்டு வீச்சுக்கள் தொடர்ந்து நடைபெறுமென்றும் ஹானேய் சில நாட்களுக்குள்ளாகப் பூரணமாக துண்டிக்கப்பட்டுவிடுமென்றும் சைகோனில் உள்ள அமெரிக்க இராணுவ அதிகாரிகள் கூறினர்.

படகுசேவைமட்டும்நடைபெறுகிறதென்று அவர்கள் தெரிவித்தனர்.

**6 விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன**

இதற்கிடையில் வடக்கு வியட்நாம் ன்று காலை வெளியிட்டதொரு செய்தியில்; வடக்கு வியட்நாம் மீது தாக்குதல்கள் நடத்திய ஆறு அமெரிக்க விமானங்கள் நே று சுட்டுவீழ்த்தப்பட்டன என்று தெரிவித்துள்ளது.

**சைகோனில் மீண்டும் நெருக்கடி**

தென் வியட்நாம் பிரதமர் ஏர் மார்ஷல் கை சில தினங்களுக்குமுன்னர் வெளியிட்டிருந்த அறிவிப்பைத் தொடர்ந்து சைகோனில் இப்போது நெருக்கடி மீண்டும் ஏற்பட்டிருப்பதாக பார்வையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

டாநங்கைச் சேர்ந்த பிரபல பௌத்த தலைவர் ஒருவர் நேற்று விடுத்த செய்தியொன்றில் செப்டம்பர் மாதத்தில் பொதுத்தேர்தல் நிச்சயம் நடைபெற வேண்டுமென்று கோரியுள்ளார்.

பௌத்த மாணவர்கள் கோஷ்டி ஒன்று உருவாக்கப்பட்டிருப்பதாகவும் இக் கோஷ்டியினர் பிரதமர் கை மீது குற்றம் சுமத்தி வருவதாகவும் செய்திகள் கூறுகின்றன.

பொதுத்தேர்தல் நடைபெற்றபின்னரும்,'ஒருவருட காலத்துக்குத் தாம் பதவியில் தொடர்ந்திருக்கப் போவதாக பிரதமர் கை அறிவித்திருந்தது இங்கு நெருக்கடியைத் தோற்றுவித்திருப்பதாக பார்வையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

தென்வியட்நாமில் மாணவர்கள் கூட்டாகச் சேர்ந்து ''போராட்டக் குழு'' வொன்றை அமைத்திருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் நடத்துவதை தென்வியட்நாம் பிரதமர் தாமதப்படுத்துகின்றார் என்று இக் குழு குற்றம் சுமத்தியுள்ளது

---

ரொடீஷிய நெருக்கடி

## பூர்வாங்க பேச்சுக்கள் லண்டனில் ஆரம்பம்

லண்டன், மே 9

லண்டனில் நடைபெறும் ரொடீஷியா பேச்சுவார்த்தைகளை காமன்வெல்த் வட்டாரங்கள் மிகவும் உன்னிப்பாகக் கவனித்துவருவதாக செய்திகள் கூறுகின்றன.

''சட்டவிரோத'' ஸ்மித் அரசாங்கத்தின் பிரதிநிதிகளுக்கும் பிரிட்டன் அரசாங்க அதிகாரிகளுக்குமிடையேயான ரொடீஷிய பேச்சுவார்த்தைகள் இன்று இங்கு ஆரம்பமாகின்றன.

பிரிட்டிஷ் பிரதமருக்கும் ரொடீஷிய அயன் ஸ்மித்துக்குமிடையே ஒரு சந்திப்பை ஏற்படுத்த வகை செய்யும் இப் பூர்வாங்க பேச்சுவார்த்தைகள்குறித்து ஆபிரிக்க நாட்டுப் பிரதிநிதிகள் பலர் ஏற்கனவே அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

## விளையாட்டு வினையானது

ஹைதராபாத், மே 9

கடப்பை ஜில்லாவிலுள்ள சுற்றுப்பள்ளிக் கிராமத்தில் ஒரு பெரிய தீ விபத்தில் 77 குடும்பங்கள்வீடிழந்தன. 5 வயதுப் பையனொருவன் விளக்குடன் விளையாடியதே இதற்குக் காரணமென்று சொல்லப்படுகிறது.

155 வீடுகள் தீப்பிடித்துக் கொண்டதாகவும் அவற்றில் 77 வீடுகள் நாசமடைந்ததாகவும் கூறப்படுகிறது.

## மேத்தா திருப்தி

புதுடில்லி, மே 9

வாஷிங்டன்சென்று திரும்பிய இந்திய திட்டமந்திரி திரு. அசோக் மேத்தா நேற்று பத்திரிகை நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் வாஷிங்டனில் தாம் நடத்திய பேச்சுக்கள் திருப்திகரமாக இருக்கிறதென்றும் எதிர்பார்க்கும் உதவி கிடைக்குமென்றும்கூறினார்.

இந்தியாவின் நான்காவது திட்டத்துக்கு வெளி உதவி கிடைப்பது உறுதியென்றும் இதே நேரத்தில்அமெரிக்கா தவிர்ந்த ஏனைய (வெளி) நாடுகளுடன் இந்தியாவுக்கான தேவைகளைத் தீவிரமாக விளக்கி தேவைகளை அதிகரிக்க வேண்டுமென்றும் அவர் குறிப்பிட்டார்.

அமெரிக்க அதிபர் திரு. லிண்டன் ஜோன்ஸனுடன் நடத்திய பேச்சுக்கள்பற்றி பிரதமர் திருமதி இந்திரா காந்திக்கு அவர் இன்று விளக்குவார்.

## நாகாலாந்துசட்டசபை

ஷில்லாங், மே 9

நாகாலாந்து சட்டசபை இடைத்தேர்தலில் ஆளும் கட்சி உறுப்பினர்கள்7 பேர் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

சட்டசபையின் மொத்த ஸ்தானங்கள் 46. இதில் 42 ஸ்தானங்கள் ஆளும் கட்சியினருடையது.

## நடனக்கலை பாதிப்பு

சென்னை, மே 9

சட்டம் இயற்றியதால் தேவதாசிகளின் எண்ணிக்கை குறைந்துவிட்டது. அதனுல் நாட்டியக் கலை பாதிக்கப்பட்டுள்ளது. இந்தக்காலத்தில் பரதநாட்டியம் பயில்வதற்கு முன்பு போல் ஏற்ற சூழ்நிலை இல்லை. நாட்டியம் செய்பவர்களுக்கு இசை நன்கு தெரிந்திருந்தால்தான் அவர்கள் அளிக்கும் கலைவிருந்துஜீவன்பெறும் என்று இந்திய லளித கலைக் கழகத்தின் 19-வது நாட்டியக்கலை மாகாநாட்டுக்குத் தலைமை வகித்துப் பேசிய திரு. சந்திரசேகர் குறிப்பிட்டார்.

## தங்கக்கட்டுப்பாடு ரத்துச்செய்ய மொரார்ஜி ஆதரவு

சென்னை, மே 9

தங்கக் கட்டுப்பாடு உத்தரவில் கணிசமான மாறுதல்களைச் செய்யும்படி மத்தியஅரசாங்க நிதிஇலாகாவுக்குச் சென்னை அரசாங்கம் யோசனை தெரிவித்துள்ளது.

தங்கக்கட்டுப்பாட்டை ரத்துச்செய்யவேண்டும் என்று ஒரு காங்கிரஸ் அங்கத்தவர் கேட்டுக்கொண்டார். இந்தச் சட்டத்தைக் கொண்டுவந்த முன்னாள் நிதிமந்திரி திரு.மொரார்ஜி தேசாயே அதை ரத்துச் செய்வதைப் பூரணமாக ஆதரிப்பதாகக் கூறினர்.

## வால்காட் வாக்குமூலத்தில் திடுக்கிடும் தகவல்

பம்பாய், மே 9

கள்ளக் கடத்தலுக்காக கைதுசெய்யப்பட்டுள்ள டேனியன் வால்காட்டும் ஜீன்டோன் ஸேயும் பம்பாயில் ஒரு மாகாண மாஜிஸ்திரேட்டிடம் அளித்துள்ள ஒப்புதல் வாக்குமூலத்தில் திடுக்கிடத்தக்க சில தகவல்களை வெளியிட்டிருப்பதாகத் தெரிகிறது.

இந்தத் தகவல்கள் அவர்களுடைய கள்ளக்கடத்தல் [illegible] அவர்களுடன் தொடர்பு கொண்டிருந்தவர்கள் சம்பந்தமானவை எனக் கூறப்படுகிறது.

---

## 'கோபால் கோகலே கொள்கையைப் பின்பற்றுக'

### ராஷ்டிரபதி செய்தி

புதுடில்லி. மே. 9

தேசீயவாதி கோபாலகிருஷ்ணன் கோகலேயின் நூறுவது பிறந்ததின விழா இந்தியாவில் இன்று சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

இந்திய ராஷ்டிரபதிடாக்டர் ராதாகிருஷ்ணன், கோபால் கோகலேயின் 100வது பிறந்ததினத்தை முன்னிட்டு இந்திய வானெலியில் விடுத்ததொரு செய்தியில், ''பொதுவாழ்க்கையில் நாம் கோகலே விட்டுச் சென்ற சிறப்பான பணிகளைக் கடைப்பிடிப்பதுதான் அவருக்கு நாம் செய்யும் பெரும் கைம்மாருகும்'' என்று கூறினர்.

''மனிதன் எதைச்சாதிக்க விரும்புகின்ருன்? வெறும் புகழ்ச்சிக்கு மட்டும் மனிதன் ஆளாவதில் அர்த்தமில்லை. ஒரு மனிதனுக்கு அறிவு, திறமைமட்டும் இருந்தால் போதாது. அவனுக்கு அறப்பொறுப்பும் இருக்கவேண்டும். சட்டசபைக்கு மக்கள் தேர்ந்தனுப்பும் பிரதிநிதி சாதி, சமய அடிப்படையில் இருக்கக்கூடாது. குணம், திறமை இரண்டுடன் தியாகவுணர்ச்சியும் அவரிடம் இருக்கவேண்டும்'' என்று ராஷ்டிரபதி டாக்டர் ராதாகிருஷ்ணன் கூறினர்.

இந்தநாட்டுக்கு இலவசக் கல்வி வேண்டுமென்றுகோரி அதற்கு வாதாடியவர் மறைந்தவீரர் கோகலேயாகும். இதற்காகவே மகாத்மா காந்திஜிகூடஇவரைத் தமது குருநாதராகக் கொண்டிருந்தார், கோபால் கோகலேயிடம் வீரம் இருந்தது. நாட்டுக்கு சிறப்பான பணி ஆற்றவேண்டுமென்ற ஆர்வம் மிகுந்திருந்தது, இதன் காரணமாகத்தான் இந்தியாவின் ஒரு மகத்தான தேசியவாதியாக அவர் மாறினர். அவர்ஆற்றிய தொண்டுகள் அளவிடமுடியாதது. அவரின் சேவைகளைத் தொடர்ந்து ஆற்றுவது நாம் அவருக்குச் செய்யும் சிறப்பான பணியாகும்'' என்றும் ராஷ்டிரபதி டாக்டர் ராதாகிருஷ்ணன் குறிப்பிட்டார்.

**கோகலே வாழ்க்கைக் குறிப்பு**

கோபால் கோகலே, ஏழ்மையான குடும்பமொன்றில் நூறு வருடங்களுக்கு முன்னர் பிறந்தார். இளமையிலேயே அவரிடம் நாட்டுப்பற்று மிருந்திருந்ததால்பல இயக்கங்களிலும் அவர் தீவிரமாகப் பங்குபற்றினர்.

முப்பதாவது வயதில் இந்திய காங்கிரஸ் கமிட்டியின் முக்கிய உறுப்பினராஞர். 34-வது வயதில் பம்பாய் சட்டசபையின் ஒரு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இதன்பின்னர் இந்திய ஊழியர் சங்கத்தை நிறுவினர். இந்திய காங்கிரசின் காசி மகாநாட்டுக்குத் தலைமையும் வகித்தார்.

சிறந்த சட்டசபை வாதியான திரு: கோகலே, சட்டவிதிகள்மூலம் நாடு சுதந்திரம் பெறவேண்டுமென்று கோரினர். 1915-ம் ஆண்டு பெப்ரவரி மாதத்தில் இவர் காலமானர்.

## நாவுக்கரசர் திருநாள்

காரைநகர், திங்கள்

காரைநகர் சைவமகா சபையினர் திருநாவுக்கரசர் திருநாளை மகாசபை மண்டபத்தில் 13-ந் திகதி வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்குக் கொண்டாடுவர்.

அன்று திரு. மு. கு. சுப்பிரமணியம் 'மருணீக்கியார்' என்னும் பொருள் பற்றி ஓர் சொற்பொழிவாற்றுவார். கூட்டத்திற்கு திரு. ச. சபாபதி தலைமை வகிப்பார்.

## பிரதமரை சந்திக்க முடிவு

யாழ்ப்பாணம், செவ்.

வடஇலங்கை கள் இறக்குந்தொழிலாளர் சங்கத்தினர் தங்கள் குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் பொருட்டு பிரதம மந்திரியையும் உள்நாட்டு மந்திரியையும் சந்தித்துப் பேச்சுவார்த்தைகள் நடாத்துவதெனத் தீர்மானித்துள்ளனர்.

## இலவச படக் காட்சி

யாழ்ப்பாணம், செவ்.

நல்லூர் சங்கிலியன் மன்றத்தின் ஆதரவில் அமெரிக்கத் தகவல்நிலையத்தினரால் கென்னடியின் வாழ்க்கைச் சரிதையைச் சித்தரிக்கும் படக்காட்சி இன்றுமாலைசங்கிலியன் மன்ற மைதானத்தில் காண்பிக்கப்படும்.

## வெளிநாடு சுற்று விஜயம்

யாழ்ப்பாணம், செவ்

மத்துகம அம்பத்தலை குறூப் கோட்டத்தை திரு. எப் ஏ அல்போன்சும் திருமதி அல்போன்சும்விமான மூலம் ஐரோப்பாவுக்கான சுற்றுப் பிரயாணமொன்றை நடத்துவதை மேற்கொண்டுள்ளனர்.

பம்பாயில் தங்கியபின்னர் ரோம், நேப்பல்ஸ், வெனிஸ் பாரிஸ், சுவிட்ஸர்லந்து முதலிய இடங்களுக்குச் சென்று ஆகஸ்ட் மாதம் இலங்கை திரும்புவார்கள்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

கண்ணுக்குப் பல்வேறு பொருள்களாகத் தோன்றும் இருட்டிலிருந்து எல்லாவற்றையும் சிவமயமாகக் காணும் அருள்ஜோதிக்கு என்னை நடத்திச் செல்வாயாக.

— சுவாமி ராமதாஸ்

# ஈழநாடு

EELA NADU; National Tamil Daily Post Box 49, JAFFNA
Telegrams: EELA NADU Jaffna: Phone: 329

பராபவ சித்திரை மீ 27 உ (10-5-66)


## விலைக்கட்டுப்பாடு

விலைக் கட்டுப்பாடு இலாகாவுக்கு கொழும்பு பிரதம மாஜிஸ்டிரேட் ஒரு முக்கிய வழக்கில் கொடுத்துள்ள "சவுக்கடி" இந்த இலாகாவின் நிர்வாகம் எவ்வளவு மோசமாகவுள்ளதென்பதையும், பொது மக்களின் நன்மை எப்படிப் பாதுகாக்கப்படாமல் இருக்கிறதென்பதையும் காட்டுகின்றது.

"ஒருசில சதங்கள் கூடுதலாக விற்கும் சின்னக் கடைக்காரர்களைப் பிடிப்பதில் நீங்கள் புலிகள். ஆனல் பெரிய இறக்குமதியாளர்கள் விஷயத்தில் எல்லாருமே பூனையாகிவிடுகிறீர்கள்" என்று கருத்துப்பட அந்த இலாகாவைச் சேர்ந்த ஓர் அதிகாரிக்குச் சூடு கொடுத்து, அந்தஇலாகா அனைத்தையுமே அடியோடு கலைத்துவிடலாமென்றும் சொல்லியிருக்கிருர்.

விலைவாசிகள் விஷம் போல் ஏறி, வாழ்க்கைச் செலவுகள் நாளுக்குநாள் அதிகரித்து, பொதுமக்கள் தவிக்கையில், விலைக் கட்டுப்பாட்டு இலாகா இவ்வளவு மோசமாக நடப்பதாயின் அது மன்னிக்க முடியாத பெரிய குற்றமாகும். பெரிய திமிங்கிலங்கள்போலுள்ள இறக்குமதியாளர்களைப் பிடிக்க முடியாமல், அற்ப மீன்கள் போலுள்ள சில்லறைக் கடைக்காரர்களைப் பிடிப்பதாயின், இந்தக் கொள்ளைலாப வியாதியை நீக்கவே முடியாது. இறக்குமதியாளரும், மொத்த விற்பனையாளர்களும் அடிப்படையிலிருந்து கள்ளத்தனங்கள் செய்ய, முடிவில் பிடிபடுவது அப்பாவிகளான சிறிய கடைக்காரர்களே.

பெயரளவில் விலைகளைக் கட்டுப்பாடு செய்தும், ஒரு பெரிய இலாகாவை அமைத்தும் அந்த இலாகா திறமையாக, சரிவர வேலை செய்யாவிடில் என்ன பயன்? மக்களுக்கு எப்படிக் கஷ்ட நிவாரணம் ஏற்படும்? கொழும்பு நீதிபதி அளித்த சாட்டைக்குப் பின்பாவது, மேற்குறித்த இலாகா விழித்தெழுந்து, தங்கள் கடமையைத் திறமையாகச் செய்யுமா? அரசாங்கம் இதுபற்றி தீவிர நடவடிக்கை எடுத்து, பொதுமக்களின் நன்மையைப் பாதுகாக்கக் கடமைப்பட்டுள்ளது. அப்படிச் செய்யாவிடில், அரசாங்கம் பொதுமக்களின் அபிமானத்தையும் நம்பிக்கையையும் இழந்துவிடுவதாக இருக்கும்.

## ராஷ்டிரபதியின் பொன்மொழி

ஜனநாயக பொதுவாழ்விலேயுள்ள ஊழல்களுக்கான ஒரு முக்கிய காரணத்தை இந்திய ராஷ்டிரபதி ராதாகிருஷ்ணன் அவர்கள் கோகலே நூற்றுண்டுவிழா வானெலிப் பிரசங்கத்திடையே குறிப்பிட்டார்கள். இந்தியாவுக்கு அவர் கூறியது நம் இலங்கைக்கும் மிகப் பொருந்தும்.

"பார்லிமெண்ட், சட்டசபை முதலிய பொது ஸ்தாபனங்களுக்கு வேட்பாளர்களை நாம் தெரிவு செய்கையில், ஒழுக்கம், நேர்மை, திறமை முதலியவற்றைக் கவனியாமல், சாதி, வகுப்பு, பணம் முதலிய காரணங்களைக்கொண்டு கூடாதவர்களைத் தெரிவு செய்வதே, பொதுவாழ்வு மோசமாவதற்கு ஒரு முக்கிய காரணம்" என்ருர். ஒழுக்கமற்றவர்களை, திறமையற்றவர்களை, அற்ப சுயநலம் முதலிய காரணங்களால் மக்கள், ஆதரித்துத் தெரிவுசெய்வதாயின், ஜனநாயகம் எப்படி உருப்பட முடியும்?

ஊருக்கும் நாட்டுக்கும் தீங்குகள் ற்பட்டு, ஜனநாயகமே தோற்று, சர்வாதிகாரக் கொடுமைகளுக்கு ஆளாக வேண்டியதுடன், முடிவில் நாம் பெற்ற சுதந்திரத்தையும் இழக்க வேண்டி நேரிடும்.

பார்லிமெண்ட், ஸ்தல ஸ்தாபனம் முதலியவற்றுக்கு மக்களின் பிரதிநிதிகளாகத் தெரிவுசெய்யப்படுபவர்களில் சிலர் தியாகசீலர்களாக மேலான பணி புரிவதை நாமறிவோம். ஆனல் துரதிருஷ்டவசமாகப் பெரும்பாலோர், தங்கள் சுயலாபத்தையும், சுயநலத்தையும் கருதியே காரியங்கள் செய்வதால் நிர்வாகத்தில் ஊழல்கள் அதிகரிக்கவும், பொதுமக்கள் பல கஷ்டங்களுக்கு உள்ளாகவும் நேரிடுகிறது. டாக்டர் ராதாகிருஷ்ணன் கூறியுள்ள பொன்மொழிகள் இங்கு பொதுமக்களுக்கு நல்ல பாடமாக இருந்து, ஒழுக்கசீலர்களும் திறமைசாலிகளுமே பொது ஸ்தாபங்களுக்குத் தெரிவு செய்யப்படுவதுடன், நமது ஜனப்பிரதிநிதிகள் சுயநலம் சிறிதும் கருதாமல் மேலான தியாக சேவை செய்யவும் நம் பொதுவாழ்வு மேம்படவும் உதவ வேண்டும்.

## உணவு உற்பத்தியை அதிகரிக்க தீர்மானம்

கோண்டாவில் திங்கள்

இணுவில் தேசிய விவசாயிகள் கழகத்தின் வருடாந்தக் கூட்டம் கழகத்தலைவர் திரு இ பொன்னம்பலம் தலைமையில்இணுவில் சைவ மகாஜன வித்தியாசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

கூட்டத்தில் இவ்வாண்டு முடிவதற்குள்ள விவசாயிகளுக்கிடையில் ஓர் விவசாயப் போட்டியொன்றை நடத்துவதென்றும் பம்பாய் வெங்காயம் உருளைக்கிழங்கு ஆகிய உப உணவுப்பயிர்களை கழக அங்கத்தவர்கள் பெருந்தொகையில் உற்பத்திசெய்ய வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

கூட்டத்தில் [illegible] புதுவருட உத்[illegible] களாகத் தெரிவுசெய்யப்பட்டனர். தலைவர் இ. செ. இலகுநாதன், உபதலைவர் அ. ஞானேஸ்வரன், காரியதரிசி திரு இ. பொன்னம்பலம், உபகாரியதரிசி ஆ வடிவேலு தனதிகாரி திரு ம மகாலிங்கம், விவசாயப் பொறுப்பாக திரு அ துரையப்பாவும், விளையாட்டிற்கு திரு. க. வேதநாயகமும், [illegible] மும், மற்றும் [illegible] நிர்வாகசபை காரியதரிசிகளும் தெரிவு செய்யப்பட்டனர்.

## கிளை றுவ முயற்சி

உடுப்பிட்டி, திங்கள்

கரவெட்டி கிழவிதோட்டத்தில் தமிழரசுக்கட்சி மாதர் முன்னணியொன்றை உருவாக்கும் முயற்சியில் இப்பகுதியைச் சேர்ந்த சில தமிழரசுப்பிரமுகர்கள் தீவிரமாக ஈடுபட்டுள்ளதாகத் தெரிகிறது. பெரும்பாலும் இம்மாத நடுபபகுதியில் இம்மாதர் முன்னணியின் அங்குரார்ப்பணவிழா நடைபெறுமெனவும் இதில் வட்டுக்கோட்டை எம் பி திரு அ. அமிர்தலிங்கம், பருத்தித்துறை எம் பி திரு. க. துரைரத்தினம், அட்வகேட் திரு. க, ஜெயக்கொடி, திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம ஆகியோர் கலந்து கொள்வரெனத் தெரிகிறது

## அபிஷேகமும் பஜனையும்

நவாலி, திங்

நவாலி வடக்கு தேற்று மரத்தடி ஸ்ரீ வைரவசுவாமி கோயில் சித்திராபூரணை விசேஷ உற்சவமும் அபிஷேக ஆராதனையும் சென்ற புதன்கிழமை சிறப்பாக நடைபெற்றது.

'சித்திரைக்கு சித்திரனர்' பெருங்கதையும், 'பசுவின் கதை' என்னும் பெருங்கதையும் படிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் திவ்விய ஜீவனசங்கத்தினர் நாமபஜனையும் தேவாரபாராயணமும் ஓதினர். விழாவில் ஏராளமான பக்தர்களும் கலந்துகொண்டனர்.

## 'உணவு உற்பத்தியில் ஈடுபடுக'

உடுப்பிட்டி, திங்கள்

வடமராட்சியில் புதியதோர் பயிரான உருளைக்கிழங்கை இம்முறை விவசாயிகளுக்கு அறிமுகப்படுத்தியதோடல்லாமல் அதனல் அதிக லாபமும் பெறலாம் என்பதையும் எடுத்துக்காட்டிய பெருமையில் எமது இளைஞர் விவசாயக்கழகமும் பங்குகொள்கிறது. இனிவரும் போகங்களில் உருளைக்கிழங்கோடு பம்பாய் வெங்காயம் பீற்றுட், கோவா முதலிய பயிர்களையும் பயிரிடுவதோடு நமது கழக அங்கத்தவர்கள் ஒவ்வொருவரும் வீடுகளில் கோழி வளர்ப்பு, ஆடு, மாடு பராமரிப்பு முதலிய முயற்சிகளில் ஈடுபட வேண்டும். அரசாங்க உத்தியோகங்களுக்காக அலைந்த காலம் போதும். இனிமேலாவது உணவுப்பொருள் உற்பத்தியில் நாட்டம்செலுத்தவரும்படி இலங்கையிலுள்ள சகல வாலிபர்களையும் அழைக்கின்றேன் இவ்வாறு நெல்லியடி இளைஞர் விவசாயக்கழகத்தின் 13வது ஆண்டு நிறைவுக் கூட்டத்தில் மேற்படி கழகத்தின் புதிய தலைவரும் குண்டசாலை மாணவருமான திருமா சிவஞானசுந்தரம் பேசுகையில் கூறினர்.

பருத்தித்துறை கமத்தொழில் இலாகாசெய்கைமுறை காட்டும் உத்தியோகத்தர் திரு எஸ் கிருஷ்ணபிள்ளை தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது.

நடப்புவருட உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர்

தலைவர் திருமா சிவஞானசுந்தரம், காரியதரிசி திரு க செ. சுவர்ணராசா

### ஆசிரியருக்குக் கடிதம்

## யாழ். மணிக்கூட்டு கோபுரம்

4-5-66 'ஈழநாட்'டில் யாழ்ப்பாண மணிக்கூட்டு கோபுர வரலாற்றை அறியத் தந்தீர்கள் இன்னும் பத்துப் பன்னிரண்டு வருடகாலத்தில் நூற்றுண்டுவிழா கொண்டாடவேண்டிய கோபுரத்தின் தற்கால நிலைமையையும் உங்கள் வாசகர்களுக்கு அறிவிப்பீர்களா? முற்காலத்தில் வடக்கே நாவலர்வீதிச் சந்தியில் வருபவர்களுக்கு காட்சியளித்த கோபுரம் எங்கே? மேலும் சமீபத்தில்கோபுர நுனியில் அரசமரம் ஒன்று வேரூன்றி இருப்பதைகண்டீர்களா? இக்கோபுரத்தை பராமரிப்பவர்கள் இவ்வளவு கவனம் செலுத்தினல் இதன் நூற்றுண்டுவிழாவைக் கொண்டாட கிடைக்குமா?

--யாழ்வாசி

## விழாக் கொண்டாட நடவடிக்கை

யாழ்பாணம்.செவ்.

வடஇலங்கை நூல் நிலைய சங்கத்தினர் அவர்களது பத்தாவது ஆண்டு விழாவை ஆகஸ்ட் மாதத்தில் கொண்டாடத் தீர்மானித்துள்ளனர். இவ் விழாவிற்கான திட்டங்களை செயற்படுத்தும் பணியில் திரு.கே. மாணிக்கவாசகர்ஈடுபட்டுள்ளார்.

## நாவுக்கரசர் குருபூசை

சுழிபுரம், திங்கள்

எதிர்வரும்திங்கட்கிழமை திருநாவுக்கரசு நாயனர் குருபூசையை வழக்கம்பரை சனசமூக நிலையத்தினர் கொண்டாடுவர்.

அன்று கோவில் முன்றலிலுள்ள புல்பூண்டு முதலியவற்றை அப்புறப்படுத்திச் சுத்தம்செய்வார்கள். நாவுக்கரசர் உழவாரத் தொண்டைச் செயல்முறையில் நினைவு கூருமுகமாக அன்றைய நிகழ்ச்சிகள் அமையும்.

## பஹாய் இயக்கக் கூட்டம்

உடுப்பிட்டி, திங்கள்

ஆஸ்திரேலியாவிலிருந்து இலங்கைக்கு வந்துள்ள பஹாய் இயக்க பயனியர் படையைச் சேர்ந்த செல்வி ட்ருமன், இலங்கை பஹாய் தேசிய ஞான சபையைச் சேர்ந்த திருமதி ஏ ஸி எம் பாஸி ஆகியோர் யாழ்ப்பாணத்தில் பஹாய் இயக்க கூட்டங்களை நடாத்துவதற்காக கொழும்பிலிருந்து வந்துள்ளனர் இவர்கள் இம்மாதம் 17-ந் திகதி வரையில் இங்கு தங்கி பல இடங்களிலும் பஹாய் பொதுக்கூட்டங்களை நடத்த இருக்கின்றனர்

(5-ம் கலத் தொடர்ச்சி)

போது ஒரு சாக்கிலிருந்த கத்தரிக்காயை எடுத்துக் காட்டி, இது தமது கமத்தில் விளைந்ததென்று பெருமையுடன் தெரிவித்தார். அழகான குழந்தையைப் பெற்றெடுத்த ஒரு தாய்க்கு உள்ள பெருமையை அவரிடம் கண்டேன். அவரது வாழ்க்கை நம் வாலிபர்களுக்கு மேலான முன்மாதிரியாக இருக்கவேண்டும். அவர் வாழ்க!

ஃ ஃ ஃ

களித்துக் கலந்ததொர் காதற் கசிவொடு காவிரி வாய்க்,
குளித்துத் தொழுது முன் நின்ற இப்பத்தரைக் கோதில் செந்தேன்,
தெளித்துச் சுவையமு தூட்டி யமரர்கள்சூழிருப்ப,
அளித்துப் பெருஞ்செல்வ மாக்கு ஐயாறன் அடித் தலமே.

—அப்பர் சுவாமிகள்

# ஐயாறன் எழுதுவது

முறிகண்டிக்குச்சமீபத்தில் ஒரு ரயிலுடன் லொறி மோதி இருவர் பலியானதாயும், சிலருக்குக் காயம்பட்டதாகவும்நேற்றுஒருசெய்தி வெளியாயிற்றல்லவா?

நல்லவேளையாக அந்த ரயிலில் இருந்த அன்பர் ஆர்.ஈ ராஜநாயகம், காயம் பட்டவர்களுக்கு ஆரம்ப சிகிச்சை அளித்து வேண்டிய உதவி செய்தார். அவர் சாரணர் உதவி மாவட்டக் கமிஷனரும்,செண்ட். ஜான் அம்புலன்ஸ் படையின் டிவிஷனல் சூபிரெண்டுமாவார்.

இந்தச் சம்பவத்தைப் பற்றி அவர் கூறியதாவது:-

'லொறிடிரைவர் ரயில்வே கடவையில் கவனயீனமாக இருந்ததால் இரு உயிர்கள் பலியாகியுள்ளன. ரயில்வே எஞ்ஜின் டிரைவர்கவனமாக இல்லாதிருந்திருப்பின், உயிர்ச் சேதம் அதிகமாக இருந்திருக்கும்.

ரயில் வண்டி கிளிநொச்சி ஆஸ்பத்திரி வரையில் பின்னல் தள்ளப்பட்டு. காயம் பட்டவர்களுக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டது. இருவர் அன்று மாண்டனர், இருவருக்குக் கால் முறிந்தது. ஒருகை முறிந்தது. மற்றொருவருக்குக் கால் போயிற்று. ஒருவருக்குத் தலை நசுங்கியது. உடலெல்லாம் ஒருவருக்குக் காயம்.

ரயில் வண்டியிலுள்ள ஆரம்ப சிகிச்சைக்கான வைத்தியப் பெட்டியிலே, 5 பழைய பாண்டேஜ் ரோல்களும், 2 அவுன்ஸ் பஞ்சும், ஒரு சதுர அடி லிண்டும், 1 அவுன்ஸ் டெட்டால், இரு ஜதைஸ்பிண்ட் இவைதான் இருந்தன. காயம்பட்ட ஒருவருக்குக் கட்டக்கூட இது காணுது" என்று கூறுகிருர் திரு. ராஜநாயகம்.

ஃ ஃ ஃ

லொறி டிரைவர் கவனமின்றி அவ்வளவு கண்மூடித்தனமாக ஓட்டியது, பல பேருக்கு ஆபத்தில் முடிந்துள்ளது. அவர் ரயில்பாதையைக்கடக்கும்போது சற்றே நிதானம் காட்டக்கூடாதா? இந்த விபத்து ஏற்படாமலே தடுத்திருக்கலாமே. இந்தச் சம்பவம், மற்ற லொறி, பஸ், டிரைவர்களுக்கு நல்ல பாடமாக இருக்க வேண்டும்.

இதே சமயம் ரயில்வேகடவைகளில் இவ்வித விபத்து ஏற்படுவது இது முதல் தடவையல்ல. ரயில் வருவதைப் பற்றி எச்சரிக்கை செய்யத்தக்க ஏற்பாட்டை எல்லாக் கடவைகளிலும் செய்யவேண்டியது ரயில்வே நிர்வாகத்தின் பொறுப்பு மாகும்.

ரயில் எஞ்ஜின் டிரைவர் அதிக கவனமாக இருந்ததற்காக அவரை பாராட்டவேண்டும். இதேசமயம் ரயிலில் ஆரம்ப சிகிச்சைக்காக வைத்தியப்பெட்டியில் குறைந்தது பத்துப்பேருக்காவதுகாணக்கூடிய மருந்து முதலியனவற்றை வைத்திருக்கவேண்டியது அவசியமாகும்.

ஃ ஃ ஃ

அன்பர் ராஜநாயகத்தைப் பற்றி முன்னர் பெயர் சொல்லாமல் இப்பத்தியில் எழுதியதாகஞாபகம். அவர் ஒரு பத்திரிகைக்காரரர். அவர் வாழ்க்கையே மிக ருசியானது. அவருடைய அனுபவங்களைப் பற்றி ஒரு புத்தகமே எழுதலாம். நாவல் கதைபோலிருக்கும். சம்பள அடிமையாக இருக்க மறுத்து, கிளிநொச்சிப்பகுதியில் கமம்செய்து தாமே உழைத்து வெற்றிகண்ட வீரர் அவர். ஒருசமயம் அவருடன் ரயிலில் வந்த

(4-ம் கலம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மின்சாரத்தால் தாக்குண்டு மரணம்

## கோவில் திருவிழாவில் சம்பவம்

யாழ்ப்பாணம், செவ்.

பொதுமக்களின் முக்கிய நிகழ்ச்சிகளுக்குப் பாவிக்கப்படவேண்டிய ஒலிபெருக்கிகள், தற்பொழுது பொது மக்களுக்கு பெரும் தொல்லையாக இருக்கிறது என்று' மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். கனகரத்தினம், வண்ணார்பண்ணையைச் சேர்ந்த ஐயாத்துரை தணிகாசலத்தின் மரணவிசாரணையில் குறிப்பிட்டார்.

வண்ணார்பண்ணை மேற்கு பத்திரகாளி அம்மன் கோயில் திருவிழாவிற்கு ஒலிபெருக்கி பூட்டப்பட்டிருந்ததென்றும், அந்த ஒலிபெருக்கிக்கு 'வயர்' மூலம் பிரதான மின்சார கம்பியிலிருந்து இணைப்புப்பெற முயற்சித்தபோது மின்சாரத்தால் தாக்குண்டு ஐயாத்துரை காலமானார் என்றும் விசாரணையின் போது கூறப்பட்டது.

23 வயதான ஐயாத்துரை மின்சார இணைப்பு செய்யும் போது அதிர்ச்சியேற்பட்டு நிலத்தில் விழுந்தாரென்றும் முதல்உதவி அளிக்கப்படவில்லையென்றும் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்சென்ற போது மரணமானாரென்றும் விசாரணையில் கூறப்பட்டது

ஐ. பாலசிங்கம் சாட்சியமளித்தபோது, காலஞ்சென்றவர் தச்சுத்தொழிலாளியென்றும், ஒலிபெருக்கியின் சத்தம் குறைந்ததால் மின்சாரம் இணைக்க முயன்றாரென்றும், மின்சார வேலைகளில் தராதரமற்றவர் என்றும் கூறினார்,

ஒலிபெருக்கி சொந்தக்காரர், பொன்னுத்துரை சாட்சியமளித்தபோது அன்று காலை காலஞ்சென்றவர் வீட்டிற்கு வந்து கோயிலுக்கு ஒலிபெருக்கி தேவையென்று கேட்டதாகவும், ஒலிபெருக்கி பாவிப்பதற்கு லைசென்சு பெறவில்லையென்றும் காலஞ்சென்றவர் பலதடவை தனக்கு உதவிசெய்துள்ளாரென்றும் கூறினார்.

ஐ. பஞ்சாட்சரம், ஏகாம்பரம் ஆகியோரும் சாட்சியமளித்தனர். மரணவிசாரணை அதிகாரி இதுசம்பந்தமாக மேலும் கூறியதாவது: இந்த மரணம் அனுபவக் குறைவினாலும், கவலையீனத்தினாலும், அறியாமையினாலும் ஏற்பட்டது. மின்சாரக் கருவிகள் கவலையீனமாக உபயோகிக்கப்படுவதால் உள்ள ஆபத்தை இச்சம்பவம் எடுத்துக்காட்டும். இந்த ஒலிபெருக்கி சட்டப்படி லைசென்சு பெறவில்லை. அதிகாரிகள் இதுபற்றிக் கவனிக்கவேண்டும். இப்பொழுது எந்த நிகழ்ச்சியும் ஒலிபெருக்கியில்லாமல் நடைபெறுவதில்லை.

ஒலிபெருக்கிபாவிப்பதற்கு லைசென்ஸ் எடுக்கவேண்டும் என்றசட்டம் இருந்தும் அதிகாரிகள் சட்டத்தைச் சரியாக அமுல்செய்துவருவதாகத் தெரியவில்லை. பிரதான மின்சாரத்தில் வயர்மூலம் இணைத்து வேலை செய்வது ஆபத்தானது. பிரதானமின்சார ஆபத்து அதிகமாகமரணத்திலதான் முடியும். இன்று ஏற்பட்ட மரணம் அதிகாரிகளின் கவனத்தைக் கவரவேண்டும். ஒலிபெருக்கியின் சொந்தக்காரர் பொறுப்புணர்ச்சியற்ற முறையில் நடந்துள்ளார்."

வுபத்தினால் ஏற்பட்ட மரணமென மரண விசாரணை அதிகாரி தீர்ப்பளித்தார்,

## திருட்டு வழக்கு: எதிரி விடுதலை

வல்வெட்டித்துறை, திங்.

வதிரியைச் சேர்ந்த திரு. ஆர். புலேந்திரன் என்பவருடைய வீட்டில் கடந்த பெப்ரவரி மாதம் 3-ந் திகதி அதே இடத்தைச் சேர்ந்த மகாலட்சுமி என்பவர் 1620 ரூபாவரை பெறுமதியான கமரா, பவுண்டன்பென், சங்கிலி முதலியவற்றைக் களவாடியதாக பருத்தித்துறைப் பொலிசாரால் தொடரப்பட்ட வழக்கு பருத்தித்துறை நீதிபதி திரு ரூபேர்ட் சில்வா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

விசாரணையின்போது திருமதி இராஜேஸ்வரி, பருத்தித்துறை பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு ராஜேஸ்வரன் ஆகியோர் சாட்சியமளித்த பின் நீதிபதி எதிரியைச் சுற்றவாளியாகக்கண்டு விடுதலை செய்தார்.

## அனலைதீவு கோஷ்டி வெற்றி

அனலைதீவு, திங்கள்

அனலைதீவு மாணவர்மன்றக் கிரிக்கெட் கோஷ்டிக்கும் நயினாதீவு கிரிக்கெட் கோஷ்டிக்குமிடையே அனலைதீவு முற்றவெளி மைதானத்தில் நடந்த இரண்டாவது கிரிக்கெட்போட்டியில் அனலைதீவு மாணவர் மன்றக்கோஷ்டி ஒரு விக்கெட்டாலும் ஐந்து ஓட்டங்களினாலும் வெற்றியீட்டியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய நயினைக் கோஷ்டியினர் சகல விக்கெட்டுகளையும் இழந்து 103 ஓட்டங்களைப் பெற்றனர். இரண்டாவது இன்னிங்ஸில் நயினைக் கோஷ்டியினர் 41 ஓட்டங்களை சகல விக்கெட்டுகளையும் இழந்து எடுத்தனர். அனலைக்கோஷ்டி இரண்டாவது இன்னிங்ஸில் 9 விக்கெட்டுகள் நஷ்டத்திற்கு 74 ஓட்டங்களைப்பெற்றது.

## வெளியீட்டுவிழா

யாழ்ப்பாணம், செவ்வாய்

யாழ் இலக்கியவட்டத்தின் சுருட்டு கைத்தொழில் வெளியீட்டுவிழா இரசிகமணி கனக செந்திநாதன் தலைமையில் இன்று 5-30 மணிக்கு யாழ் நகரமண்டபத்தில் நடைபெறும் இவ்வைபவத்தில் திரு க துரைரத்தினம் எம் பி, திருவாளர்கள் ஆ துரைராசசிங்கம், எம் எம் சி, ஆ இராஜகோபால், பொ இளையப்பா, ச அந்தோனிப்பிள்ளை, வை தனேஸ்வரன் முதலானவர்களின் சிறப்புச் சொற்பெருக்காற்றுவர்

## வல்வெட்டித்துறையில் மின்சாரமில்லை

வல்வெட்டித்துறை, திங்கள்

சென்ற மாதம் 30-ந் திகதி தொடக்கம் வல்வெட்டித்துறைக்கு மின்சாரம் இல்லாமல் இருந்து வருகிறது இங்குள்ள மின்சாரம் வினியோகிக்கும் கருவி பழுதடைந்துவிட்டதே இதற்குக் காரணம் எனத் தெரிகிறது

## மலேசியா விருப்பம்

கோலாலம்பூர், மே 9

மலேசிய பிரச்னையைப் பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்த்து வைக்க இந்தோனேஷியா முன்வந்திருப்பதை மலேசிய உதவிப் பிரதமர் துன் அப்துல் ரஸாக் வரவேற்றுள்ளார்.

இப்பிரச்னை பேச்சுவார்த்தைகள்மூலம் தீர்க்கப்பட்டு இருநாடுகளிடையேயும் வழமைபோல் மீண்டும் உறவுகள் ஏற்பட வேண்டும் என்று இவர் தெரிவித்துள்ளார்.

## செயற்கை மழை

ஹவானா, மே 9

செயற்கைமழையை [illegible] களை கியூபா அபிவிருத்தி செய்யவிருக்கின்றது. இங்கு [illegible] இது பெரிதும் பயன்படலாம் என்று கருதப்படுகிறது.

## செய்திச்சுருக்கம்

ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸ் முன்னாள் பொதுக் காரியதரிசியான காலஞ்சென்ற திரு. கே. ஜி. எஸ். நாயரின் நான்காவது நினைவுதினம் எட்டியாந்தோட்டையில் விமரிசையாகக் கொண்டாடப்பட இருக்கிறது.

ஃ

கொலைவழக்கு விசாரணை ஒன்றில் பொய்ச்சாட்சியம் அளித்த குற்றத்தை ஒப்புக்கொண்ட என் டபிள்யு நந்ததாச என்ற வந்துரம்பப் பகுதி வாலிபருக்கு நீதிமன்றத்தை அவமதித்த குற்றத்துக்காக 2 வருடக் கடுங்காவல் தண்டனையளிக்கப்பட்டது,

ஃ

'ஷவரின்' என்னும் சரக்குக்கப்பல்நேற்று முன்தினம் 750 டன் வெங்காயம் ஏற்றிக்கொண்டு கொழும்புத் துறைமுகம் வந்துசேர்ந்தது

ஃ

குருநாகல் மாவட்டத்தில் நடைபெற்ற கணக்கெடுப்பின்படி கடந்த பெரும்போக வேளாண்மையில் பாடசாலைகளும் களைபிடுங்குவதில் ஈடுபட்டுள்ளதால் நெல்உற்பத்தி சராசரி 21·2 சதவீதம் அதிகரித்துள்ளதாகத் தெரியவருகிறது.

ஃ

மன்னார்ப் பகுதியில் காலரா நோய் பரவாது தடுக்கப்பட்டுள்ளது. காலரா தடுப்பு ஊசி பலருக்கும் ஏற்றப்பட்டது.

## நீதிபதிவீட்டில் திருட்டு

திருகோணமலை, திங்,

திருகோணமலை மாவட்ட நீதிபதி திரு எப் ஜி பி பெர்னாந்தோவின் வீட்டிற்குள் திருடர் புகுந்து ரூபா 300க்கு மேல் பெறுமதியான பொருட்களை களவாடிச் சென்றுள்ளனர். இது சம்பந்தமாக எவரும் கைது செய்யப்படவில்லை.

## பொலிஸ் நிலையங்கள்

புத்தளம், திங்.

புத்தளப்பகுதியில் மேலதிகமானபொலிஸ் நிலையங்கள் நிறுவப்படல் வேண்டும் என்று அரசாங்க அதிபர் பொலிஸ்அதிகாரியைக்கேட்டுள்ளார்.

## விவசாயி சாதனை

டேராடூன், மே 9

உத்தர பிரதேசத்தில் டேராடூன் அருகே குமுலான் என்னுமிடத்தைச் சேர்ந்த விவசாயி ஒருவர் ஒரு ஏக்கர் நிலத்தில் 40·33 குவிண்டில் கோதுமையை விளைவித்து சாதனையை ஏற்படுத்தியுள்ளார்.

## கவி தாகூர்

கல்கத்தா, மே 9

கவி ரவீந்திரநாத்தாகூரின் 105-வது பிறந்ததின விழாவையொட்டி இன்று கல்கத்தாவில் அவர் நினைவாக ஒரு நாடக அரங்கு திறந்துவைக்கப்பட்டது.

## இடமாற்றம்

வல்வெட்டித்துறை, திங்

வந்தாறுமூலை அரசினர் அரசினர் மகாவித்தியாலயத்தில் அதிபராகக் கடமையாற்றிய திரு. சி. இராசதுரை யாழ்ப்பாணம் ஸ்ரான்லி கல்லூரிக்கு அதிபராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

# 'ஈழநாடு' வெள்ளிக் கிண்ண கரபந்தாட்ட போட்டிகள்

## 17-ம் திகதி தெல்லிப்பளையில் நடைபெறும்

யாழ்ப்பாணம், செவ்வாய்

'ஈழநாடு' வெள்ளிக் கிண்ணத்திற்கான தெல்லிப்பழை ஒலிம்பிக் விளையாட்டுக் கழகத்தினரால் நடத்தப்படும் மூன்றாவது வருடாந்த கரபந்தாட்ட சுற்றுப்போட்டி இம்மாதம் 17-ந் திகதி இடம்பெறும்

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மைதானத்தில் நடைபெறும் இப்போட்டியில், சுகாதார அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி திரு சி. பாலசிங்கம் பிரதம விருந்தினராக கலந்துகொள்வார் திருமதி சி பாலசிங்கம் பரிசில்களை வழங்குவார்

இப்போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு 'ஈழநாடு' வெற்றிக்கிண்ணமும், எஸ் ஜே வி செல்வநாயகம் கேடயமும் வழங்கப்படும்

அன்று மாலை 3-15 மணிக்கு கொடியேற்றி வைக்கப்படும் 3-20 மணிக்கு கரபந்தாட்டப்போட்டி, வல்வெட்டித்துறை விளையாட்டுக்கழகத்திற்கும் திருக்கோணமலை விளையாட்டுக் கழகத்திற்குமிடையில் நடைபெறும் 4-30 மணிக்கு 'சாம்பியன்' போட்டி கரவெட்டி ஐக்கிய விளையாட்டுக்கழகத்திற்கும், குப்பிளான் விக்னேஸ்வரா விளையாட்டு கழகத்திற்குமிடையில் நடைபெறும்.

திருஎஸ் சிறிகணேஸ்வரன் தலைமையில் நடைபெறும் கூட்டத்தில் செனட்டர் எஸ் நடராசா, திருவாளர்கள். மி முருகேசம்பிள்ளை, வி பொன்னம்பலம் எஸ் ஸ்ரீதரன், கே பி ஹரன் ஆகியோர் சொற்பொழிவாற்றுவார்கள் மாலை 5-15 மணிக்கு பரிசில்கள் வழங்கப்படும்.

வடக்கு-கிழக்கில்

# சிங்கள ஆசிரியர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

## கல்வி மந்திரியிடம் எம். பி. க்கள் கோருவர்

யாழ்ப்பாணம், செவ்.

வடக்குகிழக்குமாகாணங்களிலும், இலங்கையில் மற்றைய பாகங்களிலுமுள்ள பாடசாலைகளில் கல்வி கற்கும் சிங்களவர்களல்லாத மாணவர்களுக்கு சிங்களம் கற்பிப்பதற்கென ஆசிரியர்களை நியமிப்பதக்கு செய்யப்பட்ட ஒழுங்குகள் என்ன?

இம்மாதம் 22-ந் தேதி பாராளுமன்ற சபை கூடும் பொழுது கல்விமந்திரி திரு. இரியகொல்லையிடம் திரு. பி வை துடாவே மேற்கண்டகேள்வியைக் கேட்பதற்கு முன்னறிவித்தல் கொடுத்துள்ளார்.

இதுசம்பந்தமாக கீழ்க்கண்ட கேள்விகளையும் கல்வி மந்திரியிடம் திரு துடாவே கேட்பார்.

இலங்கையிலுள்ள பாடசாலைகளனைத்திலும் கல்வி கற்கின்ற மாணவர்கள் அரசகருமமொழியில் தேர்ச்சி தபெறுவதற்கெனஊக்கமளித்தலும் உதவிபுரிவதும்தான் அரசாங்கத்தின் கொள்கையென்பதை அவர் அறிவாரா? சிங்களமொழி மூலம் கல்வி கற்பிக்கப்படுகின்ற பாடசாலைகளைத்தவிர வடக்கு கிழக்கு மாகாணங்களிலுள்ள ஏனைய பாடசாலைகளின் எண்ணிக்கை எவ்வளவு? அத்தகைய பாடசாலைகளுள் எத்தனைக்கு இற்றைவரை சிங்கள ஆசிரியர்கள் அனுப்பப்பட்டுள்ளனர்? இப் பாடசாலைக்கு அத்தகைய ஆசிரியர்களை அனுப்புவதற்கு ஒழுங்குகள் எதுவும் மேற்கொள்ளப்படாதிருப்பின் ஏன் மேற்கொள்ளப்படவில்லை.

திரு எஸ் பீ யாலெகம, கல்விமந்திரியிடம் கீழ்க்கண்ட கேள்விகளைக் கேட்பார்.

வடக்குகிழக்கு மாகாணங்களிலுள்ளதமிழ்ப்பாடசாலைகளில் சிங்களம் படிப்பிப்பதற்கென ஆசிரியர்களைத் தெரிவுசெய்வதற்கான பரீட்சையொன்று 1964-ம் ஆண்டில் நடாத்தப்பட்டதென்பதையும், 1-5-65-ம் திகதியிலிருந்து இவ்வாசிரியர்களுக்கு நியமனம் வழங்குதற்கான ஆயத்தங்களை முன்னைய அரசாங்கம் செய்திருந்ததென்பதையும் கல்வு மந்திரி அறிவாரா?

1-1-66 முதல் இவ்வாசிரியர்களை நியமிப்பதற்கு தற்போதைய அரசாங்கம் நடவடிக்கை எடுத்ததென்பதை கல்வுமந்திரி அறிவாரா? இவ்வாசிரியர்களை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா?

## ஜி. ஜி. யின் ஆடசேபம்

யாழ்ப்பாணம், செவ்

கரைச்சி கிராமசபையை பட்டினசபையாக்குவது சம்பந்தமாக எடுக்கப்பட்டு வரும்நடவடிக்கையை தாம் ஆட்சேபிப்பதாக யாழ்ப்பாணம் எம். பி திரு ஜி. ஜி பொன்னம்பலம் பிரதமர் திரு டட்லி சேனநாயக்காவுக்கு அனுப்பியுள்ள கடிதமொன்றில் தெரிவித்துள்ளார்.

இவ்விஷயமாக ஏதாவது மாற்றம் செய்யப்படுமுன் பொதுமக்களினதும் கிராம சபையினதும் அபிப்பிராயத்தைப் பெறுவதற்கு விசேஷ கமிஷனரை நியமிக்க நடவடிக்கை மேற்கொள்ளும்படியும் திரு ஜி ஜி பிரதமரைக் கேட்டுள்ளார்.

## மகாகும்பாபிஷேகம்

அச்சுவேலி, திங்கள்

கொக்குவில் ஸ்ரீவிக்னேசுவரர் ஆலயத்தில் அண்மையில் மகாகும்பாபிஷேகம் நடைபெற்றது. இவ்வைபவம் அச்சுவேலி குருக்கள்தலைமையில் சிவஸ்ரீ பா. வைத்தியநாதக்குருக்களால் நடாத்தப்பட்டது.

தொடர்ச்சியாக மண்டலாபிஷேகம் முடியும்வரை அபிஷேகம் நடைபெறுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

## கோகலே நூற்றுண்டுவிழா

புனா, மே 9

கோகலே நூற்றாண்டு விழாவில் கலந்துகொள்ளும் பொருட்டு இந்திய ராஷ்டிரபதி டாக்டர் ராதாகிருஷ்ணன் இன்று இங்கு வந்து சேர்ந்தபொழுது அவர் உற்சாகமாக வரவேற்கப்பட்டார்.

கோகலே நினைவாகஇன்று விசேஷ தபால் முத்திரை வெளியிடப்பட்டது.

புதுடில்லியில் அவரது வாழ்க்கை, பண்பு ஆகியவற்றைச் சித்தரிக்கும்முறையில் கண்காட்சியொன்று நடைபெற்றது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# விவாத மேடை இல: 2

'விவாதமேடை இலக்கம் 2-ல் ஏராளமானவர்கள் கலந்துகொண்டபோதிலும் பலரது கருத்துக்கள் நன்றாகவில்லை. சந்திர மண்டலப் பிரயாணத்தினால் நன்மை உண்டா? இல்லையா?'' என்ற வாதத்தில் சிலர் நன்மை உண்டென்றும் சிலர் மாறாகவும் கருத்து வெளியிட்டுள்ளனர். சிலரது வாதம் இங்கு வெளியிடப்படுகிறது

இப்பகுதியில் கலந்துகொள்பவர்கள் தங்களின் பொன்னான கருத்துக்களைச் சுருக்கமாகத் தருவது அவசியமாகும். இங்கு வெளியாகியிருக்கும் வாதங்களை இப்பொழுது கவனத்தில் கொண்டு நீங்கள் பதிலளிக்கலாம் அனுப்பவேண்டிய விலாசம்: விவாத மேடை - 2'', மாணவர் மலர், 'ஈழநாடு' த. பெ. 49, யாழ்ப்பாணம்.

சந்திரமண்டலப் பிரயாணம் கடந்த ஐந்து வருடங்களுக்குள்ளேயே ஆரம்பித்தது. சந்திரமண்டலத்தை யார் முதன் முதலில்சென்று அடைவதென்பதில் ரஷ்யாவுக்கும், அமெரிக்காவுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள போட்டியைக் கண்டு அறிஞர்கள் பலர் வருந்துகின்றனர். சந்திரமண்டலப் பிரயாணத்தினால் வீண்சச்சரவுகளும், குழப்பங்களும் ஏற்படுகின்றன. அதுமட்டுமின்றி பொருளாதார நிலைமை நெருக்கடியான இன்றைய உலகத்திலே இப்பிரயாணம் அதிக செலவை ஏற்படுத்துகின்றது இது ஒரு வழியில் விஞ்ஞான முன்னேற்றமானாலும் இந்த அறிவை விஞ்ஞானிகள் எத்தனையோ ஆக்க வேலைகளில் பயன்படுத்தலாம்.

எத்தனையோ பிரயாணங்களுக்குமாக எத்தனையோ லட்ச ரூபாய் செலவாகியுள்ளன. இன்னும் எத்தனை லட்சங்கள் செலவாகப்போகின்றனவோ? இதில் ஒரு பகுதியை ஆக்க வேலையில் பயன்படுத்தலாகாதா. சந்திர மண்டலப் பிரயாணம் ஒரு வீண்பணம் விரயமாக்கும் திட்டமே.

—கிருஷ்ணர்கோகுலபாலன் வட்டுக்கோட்டை.

ஃ ஃ ஃ

ஆதிகாலத்திலே ஆடையற்று வீடற்று விலங்குகளைப் போல் மரத்தடிகளிலும் மலைக்குகைகளிலும் வாழ்ந்து வந்த மனிதன் அற்றோரங்களிலே! ஆரணியங்களிலே சிறு குடிசைகளை அமைத்து வாழத்தொடங்கினான் அன்று சிறுகுடிசைகளிலே சூழுண்டு வாழ்ந்த மனிதன் இன்று ஐந்தடுக்கு மாளிகையிலே உல்லாச வாழ்வு வாழ்கின்றான். காலால் நடந்தவன் கனவேகமாக ஆகாயத்திலே பறக்கின்றான் இத்தனை முன்னேற்றத்திற்குக் காரணம் என்ன? அறிவுவளரத்தொடங்கியது. அஞ்ஞானத்தை அகற்றியது விஞ்ஞானம்.

மனிதன் விஞ்ஞானியானான். விஞ்ஞானி மேலும் பூமியின்ஈர்ப்புச்சக்தியையும் புறக்கணித்து வாயுமண்டலம், மேகமண்டலம், வருணமண்டலம், அந்தரமண்டலம் சந்திரமண்டலம் முதலியவற்றையும் ஊடுருவிச் சென்று சந்திரனிலே ஆராய்ச்சி செய்கின்றான். சந்திரனிலே எரிமலை வாய்கள், கற்பாறைகள் முதலியன இருப்பதால் உயிரினங்கள் வாழமுடியாவிட்டாலும், அங்கேயிருந்து உலோகவகைகள், மூலப்பொருள்கள் முதலியவற்றைப் பூமிக்குக்கொண்டு வரலாம் என்பதை ஆதாரமாகக்கொண்டே விஞ்ஞானிகள் ஆராய்ச்சி செய்துவருகிறார்கள். அவர்கள் தங்களுடைய ஆராய்ச்சியில்வெற்றி பெறுவார்கள். அவர்கள் வெற்றிபெறுவதால் எங்களுக்கும், அவர்களுக்கும் மிகவும் நன்மையேயாகும்.


—ந. காந்தராஜா, அ. மி. கல்லூரி, உடுப்பிட்டி

ஃ ஃ ஃ

வானத்திலேறி சந்திரமண்டல வாசலைத் ...

லாமா என்ற கேள்வி அன்று பிறந்தது. ஆனால் இன்றோ மனிதன் சந்திரமண்டலத்தை அடைந்துவிட்டானா? என்ற கேள்வி பிறந்திருக்கின்றது. மனிதன் சந்திரனை அடையும் நோக்கம் எதுவாயினும் அதனால் நன்மையிருக்கின்றது அத்துடன் தீமையுமிருக்கின்றது. உலக சனத்தொகை அதிகரித்துக்கொண்டுபோகும் இந்நேரத்தில் இன்னுமொரு கோளில் இடம் கிடைத்துவிட்டால் சனத்தொகையைப் பற்றிக் கவலைப்படுவதற்கில்லை. இதுவே நன்மையாகும்.

—செ. சந்திரகுமாரன், பல்லாகம்




ஃ ஃ ஃ

விஞ்ஞானத்தின் விளைவால் மனிதன் சந்திரமண்டலத்திற்குப் பிரயாணம் செய்ய முன்வந்துவிட்டான். முதலில் வானவெளியை வலம்வந்த மனிதன், சந்திரமண்டலத்தையும் வலம்வரவிருக்கின்றான். இதனால் இன்னும் 5, 7 ஆண்டுகளின் பின்னர் சந்திரமண்டலப் பிரயாணம் ஓரளவு வெற்றியைக்கொடுக்கும். தொடர்ந்து இன்னல்களையும் அபாயங்களையும் பொருட்படுத்தாமல் செயலில் இறங்கினால் ஈற்றில் பிரயாணம் மாபெரும் வெற்றியாகவும் கூடும். சந்திரமண்டலப் பிரயாணம்ஓரளவு நன்மைபயக்குமேதவிர பலரும்கருதுவது போல அபாயங்கள் ஏற்படாது. இப்பிரயாணம் பணச்செலவை அதிகரிக்கும்.

— கந்த. ரவிச்சந்திரன், சாவகச்சேரி.

ஃ ஃ ஃ

இன்று மனிதன் விண்வெளியிலே பிரயாணம் செய்யுமளவிற்கு விஞ்ஞானத்தில் முன்னேற்றமடைந்துள்ளதைக் காணலாம். இம்முன்னேற்றத்திற்கு மேல்நாட்டு விஞ்ஞானிகளே காரணகர்த்தா. இவ்விண்வெளி பிரயாணத்தினால் புவியியல் கல்வி பயிலும் பாடசாலை மாணவர்கள் வானவெளியில் சுவாத்தியம், அங்கு காணப்படும் உலோகம் போன்றவற்றை அறியக்கூடியதாக இருக்கிறது. இப்பிரயாணத்தினால் தீமை எதுவுமில்லை நன்மையே. விஞ்ஞானத்தின் முன்னேற்றத்தை இவை எடுத்துக்காட்டுகின்றன.

—உ. தர்மலிங்கம், யாழ்ப்பாணம்.

அடுத்த
"மாணவர் மலர்"
17-5-66-ல்
வெளிவரும்.

## புத்தர் பெருமானின் ஞான உபதேசங்கள்

(:) கொடுக்க முடியாததைக் கொடுத்தல், செய்ய முடியாததைச் செய்தல், பொறுக்க முடியாததைப் பொறுத்தல் இம்மூன்றையும்கொண்டு விளங்குபவனே உண்மை நண்பன்.

(:) பகைமை ஒருநாளும் பகைமையால் போவதில்லை. அன்பினால்தான் அதைப் போக்கமுடியும். இதுதான் அறங்கூறும் நெறி.

(:) எவன் பொங்கி எழும் வெகுளியை அடக்குகிறானோ அவன் மனத்தின் சாரதியாகின்றான்.

(:) உண்மை, ஒழுக்கம், தூய்மை என்பன எவனிடம் உண்டோ அவனே சான்றோனாகக் கருதப்படுபவன்.

(:) பிறர் குற்றம் காண்பது எளிது; தன் குற்றம் காண்பது கடினம்.

(:) இதயத்துக்குள் தீய எண்ணங்கள் வராமல் கவனித்துக்கொள்.

(:) பகைமையை ஒழித்தவரே உலகத்தில் இன்பம் அடைபவர். பழைய, தீய நினைவுகளை மறந்தவர்கள் பகைமையை ஒழித்தவர்களாகின்றார்கள்.

(:) குறைகளை எடுத்துக்கூறும் நண்பன் புதையல் காட்டுபவனை ஒப்பான். எவன் உன் நண்பனோ, நீ அவன்போல ஆவாய்.

தொகுப்பு:
சி. சண்முகலிங்கம்
திருகோணமலை

(5-ம் கலத் தொடர்ச்சி)

தார். சமணத்தை உதறித் தள்ளினார். அன்று தொட்டு திருநீறு பூசி உழவாரப்படை தாங்கிச் சிவத்தொண்டு புரியலானார்.

இதன் காரணமாக மன்னன் மகேந்திரபல்லவனின் குரோதத்திற்கு ஆளாகி எத்தனையோ இடர்பட்டார்.

நஞ்சை அருந்தச் செய்தனர், யானைக்காலில் இடறச் செய்தனர், கல்லோடுகட்டிக் கடலில் விட்டனர். எல்லாவற்றையும் சிவசக்தியால் தாங்கினார். சிவத்தின் சக்தியை உணர்ந்த மன்னவனும் சைவனானான் நாவுக்கரசர் முதன்முதலாகப் பாடிய திருப்பதிகம் ''கூற்றாயினவாறு''. இவர் நான்காம், ஐந்தாம், ஆறும் திருமுறைகளின் ஆசிரியராவர். செந்தமிழால் திறமையாகப் பதிகம் பாடியமையால் நாவுக்கரசர் என்னும் பெயர் பெற்றார்.

''வடகயிலையில் சிவபெருமான் வீற்றிருக்கும் திருக்கோலத்தைக் காணவிரும்பி இறைவன் திருவுருவைக் கண்டல்லாமல்திரும்பேன்'' என்று பிடிவாதம் பிடித்த பொழுது இறைவன் ''இத்தடாகத்தின் மூழ்கித் திருவையாறு அடைந்து யாம் கயிலைமலையில் வீற்றிருக்கும் காட்சியை அத்தலத்திலே கண்டு வணங்குக'' என்று அருளினார். அதன்படியே அத்தலத்திலே அம்மையப்பரின் காட்சிகண்டு 'மாதர்பிறைக் கண்ணியானை' என்று பதிகம் பாடினார். பின் திருஞான சம்பந்தருடன் தோழமை பூண்டு அவரின் சிவிகைதாங்கினார் அதன்பின் திருப்பூந்துருத்தியை அடைந்து திருமடம் அமைத்து உழவாரப்பணி புரிந்து வந்தார்.

நாவுக்கரசர் சித்திரை மாதச் சதய நன்னாளிலே 'எண்ணுகேன் என்சொல்லி' என்ற தமது இறுதித் தாண்டகம் பாடிப் புண்ணியா உன்னடிக்கே போதுகின்றேன் என்று இறைவன் திருவடி நிழலையடைந்தார்.

துப்பறியும் தொடர் நவீனம்

# சோலை வனம்

— கே. சி. இராசசிங்கம் —

வானம் மப்பும் மந்தாரமுமாக இருந்தது. அன்று முழுவதும் வானம் அழுதுவடிவதுபோல மழை சதா தூறிக்கொண்டே இருந்ததன் பலனாகப் பாதையெங்கும் ஒரே வெள்ளக்காடு. அப்பகுதி காட்டுப் பிரதேசமானதால் பாதை முழுவதும் குண்டும் குழியுமாகவே இருந்தது.

துவிச்சக்கர வண்டியில் வந்துகொண்டிருந்த இராமுவால் மேற்கொண்டு அந்தப் பாதையில் வண்டியை ஓட்டமுடியவில்லை. அந்திசாயும் நேரமாதலால் அவன் அன்றைய இராப்பொழுதைக் கழிப்பதற்குத் தங்குவதற்கான ஓரிடம் கண்டுபிடிக்கவேண்டி இருந்தது. அவன் உடல் களைப்புற்றபோதிலும் தனது துவிச்சக்கரவண்டியைமிதித்துக்கொண்டே இயக்கத்தைத் தொடர்ந்து நடாத்தியவண்ணம் இருந்தான்.

அவனது கைக்கடிகாரம் மாலை ஐந்தரைமணி என்று காலத்தைத் துலாம்பரமாகக் காட்டிற்று. கைக்கடிகாரம் காட்டும் மணியை ஊர்ஜிதப்படுத்துவதுபோலமேற்குத் திசையில் மறைந்துகொண்டிருந்த செங்கதிரோனின் பொற்கதிர்கள் மட்டும் இடையிடையே மரக்கிளைகளுக்கு இடையில் தெரிந்தன.

இராமு இன்னும் அரைமணி நேரத்துக்கிடையில் அந்தக் காட்டுப்பிரதேசத்தில் ஒரு பத்திரமான இடத்தைக் கண்டுபிடித்து இராப்பொழுதைக் கழிக்கவேண்டும். இன்றேல்...

இதை நினைக்கவே அவன் மனக்கண்முன் இரவின் பயங்கரமும், கொடிய மிருகங்கள் நிறைந்துள்ள காட்டுப் பிரதேசமும், மழைக்காலமும் தோன்றி சிந்தையைவிகாரப்படுத்தியது. உரோமங்கள் துருத்துக்கொள்ளத் தொடங்கின. துவிச்சக்கரவண்டியை நிறுத்தி கால்சட்டை பாகெட்டுக்குள் திணித்துவைத்திருந்த வரைபடத்தைஎடுத்துத் தான்நிற்குமிடத்தின்விபரத்தைப் பார்த்தான்.

அவனது வரைபடத்தின்படி அவன் அச்சமயம் நின்றுகொண்டிருந்த இடத்தின் பெயர் 'சோலைவனம்'.

சோலைவனத்துக்கு அருகிலுள்ள கிராமம் சிவபுரம். இந்தக் கிராமத்தை அடைவதற்கு இன்னும் சரியாக ஆறுமைல்களாவது சென்று காட்டாறு ஒன்றைக் கடந்து செல்லவேண்டும்.

வரைபடத்திலிருந்து விபரத்தை உணர்ந்துகொண்டவுடன் துவிச்சக்கரவண்டியை இயக்கிக்கொண்டே அந்தக் காட்டுப்பாதை வழியாக மங்கிய வெளிச்சத்தில் சென்றுகொண்டிருந்தான் இராமு.

சிங்வண்டுகளின் ரீங்காரம் அவன் செவிப்பறையில் முட்டிமோதிற்று. அதைவிட எங்கும் ஒரே நிசப்தம். சுடுகாட்டு நிசப்தம் என்பார்களே அவ்வாறு இருக்கும். (தொடரும்)

நமது விஞ்ஞானம்

# பால் வெள்ளி

— எ. இருதயதாஸ் —

சில சமயங்களில் சந்திரன் இல்லாத இரவுகளிலே இருள் எம்மைச் சூழ்ந்துள்ளபோது வானவெளியிலே முகில் கூட்டம் தோன்றும். தூரத்திலும் மிகக் கூடிய தூரத்தில் ஒரு வெளிச்சப் பரவலைக் காணலாம். இதைச் சாதாரணமாய்க் கவனிப்பின் முகிற்கூட்டமே என நாம் எண்ணுவோம். உற்று சிறிதுநேரம் கவனிக்கையில் அது அசையாமலும் மிகுந்த எட்டத்திலுமிருப்பதைஅறியலாம். இத்தோற்றப்பாடு 'பால்வெளி' (Milky Way) எனப்படும். இவை உண்மையில் எம்கண்களின் சாதாரண பார்வைக்கே அப்பாற்பட்ட கோடானுகோடி 'ஒளி வருஷ' தூரத்தில் உள்ள நட்சத்திரக் கூட்டங்களின் ஒளிப் பிரவாகமே ஆகும்.

இதை எப்படிப் பார்க்கலாம்? விடிகாலை சுமார் நாலரை மணிக்கு கிழக்கு வானத்தில் சூரியன் மதியத்தில் தோன்றுவதிலும் சற்றுக் கீழே இந்நாட்களில் மூன்றுபால் வெளித் தொடர்களைக் காணலாம். இதை வெறும் கண்களாலேயேபார்க்கலாம். மேலும் இந்நாளில் விடிவெள்ளியாகிய வீனஸ் (சுக்கிரன்) சுமார் ஐந்து மணியளவில தோற்றும்போது அதற்குச் சற்றுக்கீழே நீண்ட துலக்கமான பால்வெளியும் தெரிகின்றது. இப்பால்வெளி இவ்வைந்து மணிதொட்டு கிழக்கு முற்றாக வெளிக்கும் வரைமட்டுமே தெரிகின்றது

# "புண்ணியா உன்னடிக்கே ....."

— க. கனகலிங்கம் —

[வெள்ளிக்கிழமை 13-ந் திகதி திருநாவுக்கரசர் குருபூசைதினம். அதையொட்டி இக்கட்டுரை வெளியாகின்றது.]

பல ஆண்டுகளுக்குமுன் சைவசமயம் வரட்சியுற்றது. சமணர் சூழலில் அது வெந்தழிந்த பாலைவனமாயிற்று. சைவத்தாயின் கவலைக்கடல் நீரெல்லாம் வெம்பிவானிற்புககருமேகங்கள் திரண்டு கனிந்தன. சைவம் தளிர்க்கபெருமழையொன்று கொட்டிற்று. அம்மழைதான் திருவுநாவுக்கரசுசுவாமிகள்.

திருநாவுக்கரசு சுவாமிகள் கி. பி. ஏழாம் நூற்றாண்டின் மத்தியிலே அவதரித்தார். அப்பொழுது சமண சமயம் நாடெங்கிலும் பரவியிருந்தது. நாவுக்கரசர் சைவசமயத்தவராயிருந்த பொழுதிலும் பிற சமய நுண்பொருள்களை அறிய விரும்பிப் பாடலிபுரம் சென்று சமண நூல்களைக் கற்று சில காலத்திற்குப் பின் தருமசேனர் உன்னும் பெயருடன் சமணசமயகுருவாகத் திகழ்ந்து வரும் காலத்தில் அவரது சகோதரியாகிய திலகவதியார் தம்பியாரின் நிலைகண்டு வருந்தி இறைவனிடம் தம்பியாரை நன்னெறிக்கு அழைத்துத்தரும்படி வேண்டியதன் பயனாக இறைவன் அவருக்குச் சூலை நோயைக் கொடுத்தார். அந்நோயை சமணகுருமார்கள் மாற்றாமல் போகவே சகோதரியாரிடம் சென்று நோய் நீங்கப் பெற்றதுமல்லாமல் உண்மையையும் உணர்ந்

(3-ம் கலம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சனசமூக நிலைய 17-வது ஆண்டுவிழா

யாழ்ப்பாணம், செவ்.

நல்லூர் தெற்கு சனசமூக நிலையத்தின் 17-வது ஆண்டு விழா மேற்படி நிலையமைதானத்தில் சிறப்பாக நடைபெற்றது விழாவையொட்டி நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகளை யாழ். மேயர் திரு. அ. த. துரையப்பா ஆரம்பித்து வைத்தார். மாலை நடைபெற்ற பரிசளிப்புவிழாவிற்கு யாழ்ப்பாணக் காரியாதிகாரி திரு. செ. சிவஞானம் தலைமை வகித்தார்.

அவர் தமது தலைமையுரையில் பேசும்போது தமது பிரிவில் உள்ள சனசமூக நிலையங்களுக்குள் பல விதத்திலும் இந்த நிலையம் முன்னேற்றப்பாதையில் சென்று கொண்டிருக்கின்றதென்றும் அரசாங்க உதவியுடன் சனசமூக நிலையங்களிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கும் புதிய நெசவு நிலையங்களில்இச்சன சமூக நிலையம் ஆக்கவேலைகளைத் துரிதமாகச் செய்து கொண்டிருக்கிறதென்று கூறி அதற்குத் தனதும் பாராட்டுக்களையும்தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் பொதுத் தொண்டுகள் மட்டுமன்றி இந்நிலையம் கடவுள் வழிபாட்டிற்கும் முக்கிய கவனம் செலுத்திவருகிறதென்றும் சிறுவர்களை ஒழுங்காக கோவிலுக்குச் செல்வதற்கு அவர்கள் கையாண்ட முயற்சிகளை மற்ற நிலையங்களும் கடைப்பிடிக்கவேண்டுமென்றும் அவர் கூறினர். வெற்றி பெற்றவர்களுக்கு திருமதி. மகேஸ்வரி சிவஞானம் பரிசில்களை வழங்கினர்.

## சேக்கிழார் விழா

யாழ்ப்பாணம், திங்கள்

சேக்கிழார் பெருமானின் நினைவுநாளைச் சிறப்பாகக் கொண்டாட அகில இலங்கைச் சேக்கிழார் மன்றம் ஒழுங்குகள் செய்து வருகிறது.

திரு ம ஸ்ரீகாந்தாவைத் தலைவராகக் கொண்ட இம் மன்றம், விழாவிலே கலந்து கொண்டு சொற்பொழிவாற்ற அண்ணமலைப் பல்கலைக்கழகத் துணைத் தமிழ் பேராசியர் வித்துவான் க வெள்ளைவாரணனாரை அழைத்துள்ளதாகத் தெரிகிறது.

சேக்கிழாரின் பலதுறைச் சிறப்புகள் பற்றிய கருத்தரங்கொன்று முதல் நாள் சிறப்பு நிகழ்ச்சியாய் அமையும் என அறியப்படுகிறது இந்நிகழ்ச்சியிலே ஈழத்துச் சைவத் தமிழ்ப் பேரறிஞர்கள் பலரும் கலந்துகொள்வர் மற்றும் ஈழத்துப் பிரபல கவிஞர்கள் கலந்து கொள்ளும் கவியரங்கமும், கல்லூரிகளின் கலைநிகழ்ச்சிகளும் நடைபெற இருக்கின்றன

# யாழ். மாவட்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டிகள்

யாழ். மாவட்ட மென் பந்து கிரிக்கெட் சங்கத்தின் ஆதரவில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் மென் பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டிகளின் முடிவுகள் வருமாறு:

யங்லயன்ஸ் 'பி' பிரிவுக் கோஷ்டிக்கும் உரும்பராய் ஐக்கிய விளையாட்டுக்கழகத்துக்குமிடையேநடைபெற்ற போட்டியில் யங்லயன்ஸ் கோஷ்டி முதல் இன்னிங்சில் சகல விக்கட்டுகளையும் இழந்து மொத்தம் 111 ஓட்டங்களைப் பெற்றது. உரும்பராய்க் கோஷ்டி முதல் இன்னிங்சில் 33 ஓட்டங்களும், 2-ம் இனிங்சில் 45 ஓட்டங்களும் பெற்றது. யங்லயன்ஸ் கோஷ்டி உரும்பராய் விளையாட்டுக்கழகத்தை இனிங்ஸால் வெற்றியீட்டியது.

கந்தர்மடம் யங் சென்றல் லைற்ஸ் கோஷ்டிக்கும் யங் லயன்ஸ் 'பி' பிரிவுக்கும் இடையே நடைபெற்ற போட்டியில் கந்தர்மடக் கோஷ்டி முதல் இனிங்ஸ் 7 ஓட்டங்களும் 2-ம் இனிங்ஸ் 33 ஓட்டங்களும் பெற்றது. யங்லயன்ஸ் கோஷ்டி முதல் இனிஸ்சில் சகல விக்கட்டுகளையும் இழந்து 125 ஓட்டங்கள் பெற்று இனிங்சால் வெற்றியீட்டியது.

ரோயல் விளையாட்டுக் கழகத்திற்கும் சென் அலோசியஸ் விளையாட்டுக்கழகத்திற்குமிடையேநடைபெற்ற இப்போட்டியில் ரோயல் கோஷ்டி முதல் இனிங்சில் 50 ஓட்டங்களும் சென் அலோசியஸ் முதல் இனிங்சில் 47 ஓட்டங்களும் பெற்றன. 2-ம் இனிங்சில் ரோயல் 80 ஓட்டங்களும், அலோசியஸ் 5 விக்கட்டுகளை இழந்து 72 ஓட்டங்களும் பெற்றன. முடிவில் போட்டி வெற்றிதோல்வியின்றி முடிவடைந்தது.

கென்னடி ஞாபகார்த்த விளையாட்டுக்கழகத்துக்கும், யங்லயன் 'எ' பிரிவுக்கும் இடையே நடைபெற்ற போட்டியில் முதல் இனிங்சில் கென்னடிக் கோஷ்டியினர் 35 ஓட்டங்களும் யங்லயஸ் கோஷ்டியினர் 21ஓட்டங்களும் பெற்றனர். 2-ம் இனிங்சில் கெனடிக் கோஷ்டியினர் 64 ஓட்டங்களும், யங்லயன்ஸ்கோஷ்டியினர் 44 ஓட்டங்களும் பெற்று, கென்னடி கோஷ்டியினர் யங்லயன்ஸ் கோஷ்டியை 30 ஓட்டங்களால் வெற்றியீட்டினர்.

ஓ. எல். ஆர். கோஷ்டியும் மானிப்பாய் விளையாட்டுக்கழகமும் பங்குபற்றிய போட்டியில் முதல் இனிங்சில் சகல விக்கட்டுகளையும் இழந்து ஓ. எல். ஆர். 150 ஓட்டங்களையும், மானிப்பாய் விளையாட்டுக்கழகம் 20 ஓட்டங்களும் பெற்றன. 2-ம் இனிங்சில் மானிப்பாய்க் கோஷ்டியே துடுப்பெடுத்தாடி சகல விக்கட்டுகளையும் இழந்து மொத்தம் 24 ஓட்டங்களே பெற்றது. இப்போட்டியில் ஓ.எல்.ஆர் கோஷ்டி மானிப்பாய்க் கோஷ்டியை இனிங்சால் வெற்றியீட்டியது.

யாழ். யுத்லீக் விளையாட்டுக்கழகத்திற்கும் திருநெல்வேலி விளையாட்டுக்கழகத்துக்குமிடையேநடைபெற்ற போட்டியில் முதல் இனிஸ்சில் யுத்லீக்கழகம் 47 ஓட்டங்களும், திருநெல்வேலி கோஷ்டி 40 ஓட்டங்களும் பெற்றன. 2-ம் இனிங்சில் யுத்லீக்கழகம் 73 ஓட்டங்களும் திருநெல்வேலிக் கோஷ்டி 43 ஓட்டங்களும் பெற்றன. இப்போட்டி முடிவில் யுத்லீக் கழகம் திருநெல்வேலிக் கோஷ்டியை 37 ஓட்டங்களால் வெற்றியீட்டியது.

ஆனைப்பந்தி ஐக்கியவிளையாட்டுக் கழகத்திற்கும் நீராவியடி விளையாட்டுக் கழகத்திற்குமிடையே நடைபெற்றபோட்டியில் முதல் இனிங்சில் ஆனைப்பந்திக் கோஷ்டி சகல விக்கட்டுகளையும் இழந்து 48 ஓட்டங்களையும் நீராவியடி 68 ஓட்டங்களையும் பெற்றன. 2-ம் இனிங்சில் ஆனைப்பந்திக் கோஷ்டி 9 விக்கட்டுகளை இழந்து 6 ஓட்டங்களையும், நீராவியடி கோஷ்டி 9 விக்கட்டுக்களை இழந்து 80 ஓட்டங்களையும் பெற்றன. போட்டி வெற்றிதோல்வியின்றி முடிவடைந்தன.

இப்போட்டிகள் யாவும் யாழ். முற்றவெளி மைதானத்தில் நடைபெற்றது. இச் சுற்றுப்போட்டியில் மேலும் 6 போட்டிகள் நடைபெறவுள்ளன.

## சாவகச்சேரி தோல்வி

கோண்டாவில், திங்கள்

சாவகச்சேரி கிரிக்கெட் கோஷ்டிக்கும் கோண்டாவில் ரோயல் கோஷ்டிக்கும் இடையே கோண்டாவில் மைதானத்தில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் கோண்டாவில் ரோயல் கோஷ்டி 46 ஓட்டங்களால் வெற்றியீட்டியது

முதல் இன்னிங்ஸில் கோண்டாவில் ரோயல் கோஷ்டி எல்லா விக்கட்டுகளையும் இழந்து 65 ஓட்டங்களைப் பெற்றது. சாவகச்சேரி கோஷ்டி எலா விக்கெட்டுகளையும் இழந்து 46 ஓட்டங்களைப் பெற்றது.

2-வது இன்னிங்ஸில் ரோயல் கோஷ்டி 56 ஓட்டங்களைப் பெற்றது. சாவகச்சேரிக் கோஷ்டி எல்லா விக்கட்டுகளையும் இழந்து 29 ஓட்டங்களைப் பெற்றது. கோண்டாவில் ரோயல் கோஷ்டி 46 ஓட்டங்களால் வெற்றியீட்டியது.

## வர்த்தகக் கல்லூரி வெற்றியீட்டியது

யாழ்ப்பாணம், திங்கள்

துணைவி வை. எம். எச். ஏ. கோஷ்டிக்கும் யாழ். வர்த்தகக் கணக்கியல் கல்லூரி கிரிக்கட் கோஷ்டிக்குமிடையே யாழ். முற்றவெளி மைதானத்தில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் வர்த்தக கணக்கியல் கல்லூரி, வை. எம். எச். ஏ. கழகத்தை இன்னிங்ஸ், ஒரு விக்கட் ஓட்டங்களால் வெற்றியீட்டியது. துணைவி வை. எம். எச். ஏ. இரு ஆட்டங்களிலும் முறையே 28, 32 ஓட்டங்கள் எடுத்தது. யாழ். வர்த்தகக் கணக்கியல் கல்லூரி முதல் ஆட்டத்தில் 9 விக்கட்டுகளுக்கு 91 ஓட்டங்கள் எடுத்து தனது ஆட்டத்தை நிறுத்திக்கொண்டது.


## லீவர் பிறதர்ஸ் (இலங்கை) லிமிடெட்

யாழ்ப்பாணக் குடாநாட்டில், மேற்பார்வை செய்யும் ஒரு பெண்மணியின் தலைமையில், வீடு வீடாகச் சென்று எமது பொருட்களை விற்பனவு செய்வதற்கு கவர்ச்சியான இளம் பெண்கள் தேவை.

மனுச் செய்பவர்கள் முகவசீகரமும் ஆங்கிலத்திலும் தமிழிலும் சம்பாஷிக்கும் திறமையும் உடையவர்களாய் இருத்தல் வேண்டும்.

தெரிவு செய்யப் படுகிறவர்களுக்கு நாளொன்றுக்கு ரூபா 7/- சம்பளமும் விற்பனையில் கொமிஷனும் வழங்கப்படும்.

தயவு செய்து நேர்முகப் பரீட்சைக்காக மே மாதம் 19-ந் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிகு 'பாம்கேபட்' டுக்கு வரவும்


# கனடாவில் பயிற்சி பெறுவார்

யாழ்ப்பாணம், செவ்.



உடற்கூறு துறையில் டாக்டர் பட்டம் பெறுவதற்காக திரு. கே. பாலசுப்பிரமணியம் அண்மையில் கனடாவுக்குப்புறப்பட்டார் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் மிருகவியல் துறை விரிவுரையாளராகக் கடமையாற்றும் இவர் கனடாவில் டொரண்டோ சுகாதாரக் கல்லூரியின் உடற்கூறு பிரிவில் டாக்டர் பட்டத்திற்காகப் பயிற்சிபெறுவார்

மலேஸியாவில் பிறந்தவரான திரு. பாலசுப்பிரமணியம்கிளாவ் உயர்நிலைப்பள்ளியிலும் பின்னர் இந்தியாவில் கல்கத்தாவிலும் உயர்கல்வி கற்றுபட்டம் பெற்றுள்ளார்

அவர் இலங்கை வந்தவுடன் முதலில் தர்மராஜாக் கல்லூரியில் உயிரியல் ஆசிரியாக ஒன்றரை ஆண்டுகள்வரை தொழில்புரிந்தார் பின்னர் 1959-ம் ஆண்டு யாழ்ப்பாணக் கல்லூரியில் பட்டதாரி மாணவர் பகுதியில் சேர்ந்தார். அத்துடன் ஜி. எஸ். ஸி. ஜி ஸி. ஈ. லண்டன் பரீட்சைகளுக்கும் இலங்கை சர்வகலாசாலை பரீட்சைகளுக்கும் பயிலும் வெளிமாணவர்களுக்கும் பயிற்சியளித்தார்.

சுன்னாகம் கோல்டன் ஹோப் தோட்ட உரிமையாளரான திரு. எம். கந்தவனம் தம்பதிகளின் ஒரே புதல்வரான திரு. பாலசுப்பிரமணியம் சுமார் மூன்று ஆண்டுகள் கனடாவில் பயிற்சி பெறுவார்.

## புதியநிர்வாகிகள்

உடுப்பிட்டி, திங்.

அல்வாய் மனோகரா சனசமூகநிலையத்தின் நடப்பு வருடஉத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர் திரு. க. தங்கவேல். இணைச் செயலாளர்கள் திருவாளர்கள். மு க. கணேசலிங்கம், யோ. ச. சத்தியநாதன், பொருளாளர் திரு தா. வீரசிங்கம், இலக்கியக் காரியதரிசி: திரு ம சிவகுருநாதன், நாடகக் காரியதரிசி: திரு க பரமானந்தன், விளையாட்டுக்காரியதரிசி: திரு க, பாக்கியராசன்.

ஃ ஃ ஃ

உடுப்பிட்டி, திங்.

வதிரி கூட்டுறவுசப்பாத்து உற்பத்திச் சங்கத்தின் புதுவருட உத்தியோகத்தர்கள் தெரிவு திரு. சி. பொ. கிருஷ்ணபிள்ளை தலைமையில் நடைபெற்றது. தலைவர்: ஐ க மாணிக்கம், உபதலைவர்: திரு ஆ க பெரியதம்பி, காரியதரிசி: திரு ஐ ஆ இராசரத்தினம், தனதிகாரி: திரு நா த சுப்பிரமணியம், நிர்வாகக்குழு உறுப்பினர்களாக திருவாளர்கள் வ பமுருகேசு, மு இராசா, மு மார்க்கண்டு, வ தினகரம்பிள்ளை, நா திரவியம் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

நயினாதீவு, செவ்

நயினாதீவு கிராமசபை அதன் மாதாந்தக்கூட்டத்தில் தீவுப்பகுதிப் பிரதிநிதியாக இருந்து பலகாலம் சேவைசெய்த பெரியார் சேர் வைத்திலிங்கம் துரைசாமியின் மறைவையொட்டி இரண்டுநிமிடநேர மௌன மனுஷ்டித்தது.


களைப்பா?

உத்தம சத்தூட்டும் இரு மடங்கு சக்தி வாய்ந்த

**நுவரேலியா** ஸ்டவுட் அருந்துங்கள்

அது தருவது

இரட்டிப்பு உறுதி!

இரட்டிப்பு ஊக்கம்!

இரட்டிப்பு சக்தி!

மதுரமானது

மிருதுவானது

விட்டமின் பி செறிந்தது




சிலோன் புருவரி லிமிட்டெட், நுவரேலியா.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலிஸ் பாதுகாப்பிலுள்ள கார் வழக்கில் தீர்ப்பு

யாழ்ப்பாணம், செவ்.

விபத்தில் சிக்கிய கார் ஒன்றிற்கு சொந்தம்கோரிய வழக்கில், யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட் திரு. ரி. ஜே. ராஜரத்தினம், சாவகச்சேரியைச் சேர்ந்த எட்வாட் ராஜாவிடம் காரை ஒப்படைக்கும்படி தீர்ப்பளித்தார்

இவ்வழக்கில் கோண்டாவில் சந்தியில் நிகழ்ந்த விபத்தின் பின் கோப்பாய் பொலிசாரால் கைப்பற்றப்பட்ட கார் ஒன்றிக்கு கோண்டாவிலைச் சேர்ந்த செ. இரத்தினசிங்கம் க கந்தசாமி ஆகியோரும், சாவகச்சேரியைச் சேர்ந்த எட்வார்ட் ராஜாவும் சொந்தம் கோரியிருந்தனர்.

இவ்வழக்கில் எட்வார்ட் ராஜா சார்பில் பாரிஸ்டர் எம். சிவானந்தன் புறக்டர் வி நடராசாவின் அனுசரணையுடன் ஆஜரானர். இரத்தினசிங்கம் கந்தசாமி சார்பில் அட்வகேட் எஸ் தர்மலிங்கம் புறக்டர் ஆர் விஸ்வநாதனின் அனுசரணையுடன் ஆஜரானர்.

தீர்ப்பளிக்கும்போது எட்வார்ட் ராஜாவை ஏமாற்றி மற்றவர்கள் காரை வாங்கியிருப்பதாகவும், அதனுதான் விபத்து நேரிட்டபோது காரைவிட்டுவிட்டுச் சென்றுவிட்டார்களென்றும், எட்வார்ட் ராஜவின் பெயரில் தான் கார் பதிவுசெய்யப்பட்டிருப்பதாகவும் தெரிவித்த நீதிபதி காரை எட்வார்ட் ராசாவிடம் ஒப்படைக்கும்படி உத்தரவிட்டார்,

விசாரணை நடைபெற்ற ஒருவருட காலமும் கார் கோப்பாய் பொலிஸ் பாதுகாப்பில் இருந்தது.

# கந்தரோடையில் 100 குடும்பங்கள் வெளியேற்றப்படலாம்

## புதைபொருள் ஆராய்ச்சியின் எதிரொலி

சுன்னுகம், திங்கள்

கந்தரோடையில் புதைபொருள் ஆராய்ச்சிகள் நடைபெறும் பகுதியை அடுத்துள்ள இடங்களில் வசித்துவரும் சுமார் 100 குடும்பங்கள் இப்போதிருக்கும் இடங்களைவிட்டு வெளியேறலாமெனத் தெரியவருகிறது.

ஆராய்ச்சிகள் தொடர்ச்சியாக நடைபெற்றுவரும் பொழுது அயலில் உள்ள இடங்களிலும் புதைபொருள்கள் காணப்படுவதே இந்நிலைக்குக் காரணமெனச் சொல்லப்படுகிறது. இப்பகுதியில் சுமார் அரை ஏக்கர்வரை ஏற்கெனவே அரசாங்கம் கொள்வனவு செய்துள்ளது.

போல் பீரிஸின் சிபார்சின் பேரிலேயே இப்பகுதி வாங்கப்பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது. இப்போது நடைபெற்றுவரும் ஆராய்ச்சி வேலைகளும் போல் பீரிஸ் ஆரம்பத்திலிருந்தே தொடர்ந்து நடைபெறுகின்றன. இவ் வேலைகள் இரண்டு வருடங்கள் வரை தொடர்ந்து நடைபெறத் திட்டமிருப்பதாகக் கூறப்படுகிறது.

மட்டக்களப்பு அரசினர் கல்லூரி

# இந்துக் கோயில் உடைத்து திறக்கப்பட்டதேன்?

கொழும்பு, புதன்

தமிழ்ப் பகுதியிலுள்ள பாடசாலையொன்றில் இந்துக் கோவில் உடைக்கப்பட்டது சம்பந்தமான கேள்விகளை இம்மாதம் 23ம் திகதி பாராளுமன்றம் கூடும்பொழுது கல்விமந்திரி திரு. இரியகொல்லையை கேட்பதற்கு மட்டக்களப்பு முதலாவது எம். பி. திரு. இராசதுரை முன்னறிவித்தல் கொடுத்துள்ளார்.

மட்டக்களப்பு அரசினர் கல்லூரியிலுள்ள இந்துக் கோவில் உடைத்துத் திறக்கப்பட்டதென்பதை கல்வி மந்திரி அறிவாரா என திரு. செ. இராசதுரை கேட்பார்.

இதுசம்பந்தமான கீழ்க்கண்ட கேள்விகளையும் கல்விமந்திரிடம் கேட்பதற்கு திரு. செ. இராசதுரை எம். பி. முன்னறிவித்தல் கொடுத்துள்ளார்.

மதத்திற்கு விரோதமான இச்செய்கையை இழைத்தோர் யார்? அதற்குப் பொறுப்பாய் இருந்தவர்களுக்கெதிராய் எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது? எக்காரணங்களுக்காக அக்கோவிற்கதவு உடைத்துத் திறகப்பட்டது? கோவிலுக்கென நிர்வாகக் குழுவொன்று செயலாற்றுகையில் அங்கீகாரமளிக்கப்படாதவர்களால் அக்கதவு திறக்கப்பட்டதேன்? அக்குற்றத்தைப் புரிவதற்கு உடந்தையாயிருந்தவர்களுக்கு எதிராய் என்ன நடவடிக்கை எடுப்பதற்கு அவர் உத்தேசித்திருக்கின்ருர்.


## தேவை

யாழ்ப்பாணம் திருநெல்வேலியில் அமைந்துள்ள பட்டு நெசவு தொழிற்சாலைக்கு நெசவுத் தொழிலில் அனுபவம் வாய்ந்த பெண்கள்தேவை.

இரண்டு வருடத்திற்கு அதிகமான அனுபவம் பெற்றவர்களே கீழ் கண்ட விலாசத்திற்கு 20-5-66ற்கு முன் விண்ணப்பிக்கவும்.

அதிபர்

## சாறி எம்போறியம

124 காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

401


இப் பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலவீதி, 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1966-ம் ஆண்டு மே மாதம் 10ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## அபத்தமான குற்றச்சாட்டு

புதுடில்லி, மே 9

1965-ம் ஆண்டு பிற்பகுதியில் சீன எல்லைப் பிரதேசத்தல் இந்திய ராணுவமும், விமானங்களும் ஊடுருவல் நடவடிக்கைகளை மேற்கொண்டதாக சீன தெரிவித்திருந்த குற்றச்சாட்டுக்கள் முற்றிலும் அபத்தமானவை என்றும் பொய்யானவையென்று இந்திய அரசாங்கம் சீனவுக்கு சுட்டிக்காட்டியுள்ளது. இந்திய ஊடுருவல்கள் சம்பந்தமாக சீன 39 குறிப்புகளைத் தெரிவித்திருக்கிறது. இவைகளில் 23 ஏற்கனவே தெரிவிக்கப்பட்டுப் பதிலளிக்கப்பட்டவை. மிகுதி 16-ம் புதியவை அவைகளும் வேண்டுமென்றே இட்டுக்கட்டப்பட்டவை என்று இந்திய குறிப்பில் கூறப்பட்டுள்ளது. மேற்கு அரங்கில் சீன நடத்தியுள்ள ஊடுருவல்களை மறைப்பதற்காகவே இந்தப் பொய்க் குற்றச்சாட்டுக்கள் தெரிவிக்கப் பட்டிருப்பதாக இந்தியா தெரிவித்துள்ளது.

## மிதக்கும் பல்கலைக்கழகம்

டோக்கியோ, மே 9

'மிதக்கும் பல்கலைக்கழகமாக' பயன்படுத்துவதற்கென்றே ஒரு கப்பலைக்கட்ட ஜப்பானிய அரசாங்கம் யோசித்துவருகிறது, அக்கப்பலைக் கட்டும் வேலையை அடுத்தவருடத்தில் தொடங்குவதற்கான வகையில் திட்டங்களைத் தயாரிக்க அரசாங்கம் உத்தேசித்துள்ளது.

கட்டப்படவிருக்கும் இக்கப்பலில் மாணவர்களுக்கு வகுப்புகள் நடத்தப்படும எனவும் இந்த மாணவர்கள் செல்லுமிடங்களில் வேறு மாணவர்களைச் சந்திப்பரென்றும் இதனல் ஜப்பானிய மாணவர்களின் கல்வித்தரம் உயர வழி அமையும் என்றும் நம்பப்படுகிறது.

## கதிரமலைச் சிவன்கோவில் உற்சவம்

யாழ்ப்பாணம், செவ்

சுன்னுகம் ஸ்ரீ கதிரமலைச் சிவன் தேவஸ்தானமகோற்சவம் நாளை ஆரம்பமாகும், மு. ப. 10-30 மணிக்கு கொடியேற்றம் நடைபெறும். 10 நாட்களும் மாலை 7 மணிமுதல் 8-30 மணிவரை உபந்நியாசம் பஜனை ஆதியன நடைபெறும்.

## நீவின்

டாக்கா, மே9

பர்மிய புரட்சிசபைத்தலைவர் ஜெனரல்நீவின் கிழக்கு பாகிஸ்தானில் இரண்டு நாள் விஜயம் செய்யும் பொருட்டி இன்று இங்கு வந்துசேர்ந்தார்.

## சம்பளம் இன்னமும் கிடைக்கவில்லையாம்

யாழ்ப்பாணம், திங்கள்

இ. போ. ச. என்ஜினியரிங் பிரிவைச் சேர்ந்த ஊழியர்கள் தமக்கு வருமதியான பாக்கிச் சம்பளமும் வருடாந்த சம்பள உயர்வும் இன்னமும் கிடைக்கவில்லையென முறைப்பாடு தெரிவித்துள்ளனர்.

இவை சிங்கள தமிழ் புதுவருடப் பிறப்புக்கு முன்னர் வழங்கப்பட்டிருக்க வேண்டுமென இவர்கள் தெரிவித்துள்ளனர்.

தேசிய ஊழியர் சங்க யாழ். கிளை இது சம்பந்தமாக தாய்ச்சங்கத்துடன் தொடர்புகொண்டு நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக அறியப்படுகிறது.

ரங்கூன் மே 9

[illegible] வல் தொடர்புகள் [illegible] யிக்கப்படுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது

# 24 உள்ளூராட்சி மன்ற தேர்தல் நடைபெறும்

கொழும்பு, திங்கள்

24 உள்ளூராட்சி மன்றங்களின் தேர்தல்கள் விரைவில் நடைபெறவிருக்கின்றன.

இவற்றின் தேர்தல் இவ்வருடம் ஜனவரி மாத இறுதிக்குள் நடைபெறவிருந்தன. ஆனல் அவசரகால நிலைமை காரணமாக பிற்போடப்பட்டன

இத்தேர்தல்கள் நடைபெறும் வகையில் அவசரகாலச் சட்டத்தின் கீழ் சில வசதிகள் செய்யப்பட்டுள்ளன. எனினும் பிரசுரக் கட்டுபாடு, தேர்தல் அதிகாரம் கைப்பற்றும் அதிகாரம் தடுத்துவைக்கும் அதிகாரம் ஆகிய அவசரகாலச் சட்ட விதிகள் தொடர்ந்தும் இருந்துவருமென விசேஷ அரசாங்க வர்த்தமானி ஒன்று அறிவித்துள்ளது.

கூட்டங்களைக் கட்டுப்படுத்துதல் ஊர்வலங்களைக்கட்டுப்படுத்துதல், தடுத்தல் ஆகிய அதிகாரங்களும் இச் சட்டவிதிகள் மூலம் இருக்குமென அறிவிக்கப்பட்டுள்ளது.

# ஜி. சி. ஈ. விடைத் தாள்கள் பரிசீலனை செய்யப்படும்

## மந்திரி உறுதி

கொழும்பு, திங்கள்

ஜி.சி.ஈ. வகுப்புப் பரிட்சையில் பௌதிகம். ரசாயனம் போன்ற பாடங்களில் விடையெழுதிய மாணவர்களில் அனேகமானவர்கள் சித்தியடையவில்லை யென்பது குறித்து தமக்கு ஏராளமானபுகார்கள் கிடைத்திருப்பதாகவும் இதுவிஷயமாகத்தாம் விரிவாகப் பரிசிலனை செய்வதற்கான நடவடிக்கைகள் எடுத்துவருவதாகவும் கல்வி மந்திரி திரு ஐ. எம். ஆர். ஏ. இரியகொல்லை இன்று மக்கள் பிரதிநிதிகள் சபையில் ஒத்திவைப்பு பிரேரணையின் மீது பேசுகையில் கூறினுர்.

விடைத்தாள்கள் கவலையீனமாகத் திருத்தப்பட்டிருப்பதாகவோ, வேண்டுமென்றே புள்ளிகள் குறைக்கப்பட்டிருப்பதாகவோ கண்டுபிடிக்கப்பட்டால் அதில் சம்பந்தப்பட்டவர்கள் மீது கடும் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் ஜி. சி. ஈ. பரீட்சைக்குத்தோற்றியஎல்லோரவதுவிடைத்தாள்களை முற்ருக மீண்டும் மறு பரிசிலனை செய்யவேண்டிய நிலைமை ஏற்படும் என்றும் மந்திரி கூறினுர்.

ஜி. சி. ஈ, பரீட்சை நடைபெறும் முறைகளில் குறைகள் உண்டு என்றும் அவை நிவர்த்திக்க நடவடிக்கைகள் எடுர்க்கப்படும் என்றும் கூறிய மந்திரி உதாரணமாக சிங்கள இலக்கிய பாடத்துக்கு கொடுக்கப்படும் வினுத்தாள்களின் அடிப்படையிலேயே தமிழ் இலக்கியபாட வினுத்தாள்களும் தயாரிக்கப்படுகின்றன. சில சமயங்களில் சிங்கள இலக்கிய பாடங்கள் முடிந்தபிறகுதான் தமிழ் பாடங்கள் நடைபெறுகின்றன. இதனல் தமிழ்மாணவர்களுக்கு முன் கூட்டியே தமக்கு வரும் வினுக்களை சிங்கள வினுத்தாள்களைப் பார்த்து யூகித்துக்கொள்ளக்கூடிய நிலைமை ஏற்படுகின்றது. எனவே இது போன்ற குறைகளை நிவர்த்திக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் குறிப்பிட்டார்.

## தொண்டமான் ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இவர்களில் முதல்பகுதியினர் அடுத்தவருடத்தில் இந்தியா வருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தாயகம் திரும்பும் இந்தியப் பிரஜைகள் விஜயத்தில் இந்தியா மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் குறித்து தாம் திருப்தியடைந்திருப்பதாகதிரு. எஸ். தொண்டமான்பத்திரிகை நிருபர்களுக்குத்தெரிவித்தார். இந்திய மத்தியமந்திரிகளுடன் இது சம்பந்தமாகத் தாம் நடத்திய பேச்சுக்கள் பலனளித்திருப்பதாகவும் அவர் கூறினுர்.

## சபையில் . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஞர். ''இவர் எதிர்க்கட்சிக்கு வந்து'' வுட்டாரென்று டாக்டர் பெரேரா ஹாஸ்யமாகக் கூறி சிரித்தபோது எதிர்க்கட்சி அங்கத்தவர்கள் ஆரவாரம் செய்தனர். ஏதோ பாரதூரமான விஷயம் குறித்து பேசியவர் போல் காணப்பட்ட திரு. அட்டபத்து மீண்டும் சபையின் குறுக்கே நடந்து அரசாங்கக்கட்சிப்பகுதியில் பிரவேசித்நார். அப்பொழுது சபையில் சிரிப்பொலி எழுந்தது. இந்தசமயத்தில்மந்திரி எம்.டி. பண்டா மாத்திரமே இருந்தார்.

சபையில் தலைமை வகித்த உபசபாநாயகர் திரு அட்டந்பத்துவைப் பார்த்து சபையில் குறுக்காக நடப்பது முறையல்லவென்றும்' எதிர்க்கட்சியில் சேர்ந்து கொள்பவர்கள்தான் இப்படிவலதுபுறமிருந்து இடது புறத்துக்குகுறுக்கேபோவது என்று சுட்டிக்காட்டினர்.

திரு. அட்டப்பத்து தாம் அவசர விஷயமாக அப்படி நடந்து கொண்டதாகவும் அதற்காக தாம் வருந்துவதாகவும் சபையை அவமதிப்பது தம் நோக்கமாய் இருக்கவில்லையென்றும் கூறி உப சபாநாயகரின் மன்னிப்பைக் கோரினுர்.

அதன்பின் சபையில் எழுந்த ஆரவாரம் அமைதி பெற்றது.

## உலக பௌத்தசங்க மகாநாடு ஆரம்பம்

கொழும்பு, திங்கள்

உலக பௌத்த சங்க மகாநாடு இன்று கொழும்பு நகரமண்டபத்தில் ஆரம்பமானது.

சுமார் 40 வெளிநாடுகளிலிருந்து பிரதிநிதிகள் இந்த மகாநாட்டில் கலந்து கொள்ள வந்திருக்கிறுர்கள். இவர்களின் பெயர்கள் யாவும் கோட்டை பௌத்த வாலிபர் சங்க மண்டபத்தில் பதிவுசெய்யப்பட்டன.

மகாநாட்டின் ஆரம்ப விழாவில் கவர்னர் ஜெனரல் திரு வில்லியம் கோபல்லவா பிரதமர் திரு. டட்லிசேனநாயகா, ராஜாங்க மந்திரி திரு ஜே ஆர் ஜயவர்த்தன ஆகியவர்கள் உட்படப் பல மந்திரிகளும், வெளிநாட்டுத் தூதர்களும், எம்பிக் களும் கலந்துகொண்டார்கள்

கவர்னர் ஜெனரல் கூட்டத்தில் பேசும் போது, புத்தர் போதனைகள் தர்மத்தின் அடிப்படை யாகக் கொண்டது. உலகிலும் நம்நாட்டிலுமுள்ள வேற்றுமைகளைக் களைய இந்தப் போதனை உதவவேண்டும். இந்தக் கைங்கரியத்தைச்செய்ய பௌத்த சங்கம் முன்வர வேண்டுமென்று குறிப்பிட்டார்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org